REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஜூன் 2 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
1932 - 2022
வரு. 90 இல. 128 | Thursday 02, June, 2022 | 16 பக்கங்கள் | 40/-

பொதுக்கூட்டத்தில் உரையாற்ற

## மஹிந்தவை டெல்லிக்கு அழைக்கும் சுப்ரமணியன்

இந்து, பௌத்த ஆலய தரிசனத்துக்கும் ஏற்பாடு



முன்னாள் பிரதமர் மஹிந்தராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளதாக சுப்பிரமணியம் சுவாமி தனது 06

## 21 ஆவது திருத்தம் எனது பூரண சம்மதத்துடனேயே முன்னெடுப்பு

### ஆளும்கட்சி எம்.பிக்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை தனது பூரண சம்மதத்துடன் கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ ஆளும் கட்சியின் பாராளுமன்ற குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ, பசில் ராஜபக்ச மற்றும் எதிர்க்கட்சியில் 06

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்

### திறைசேரி செயலாளருக்கு பிரதமர் ஆலோசனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மழை,வெள்ளம் உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, இயற்கை அனர்த்தங்களை எதிர்நோக்கியுள்ள மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க தேவையான நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை 06

சவூதி அரசு 1585 பேருக்கு அனுமதியளித்திருப்பினும்

## இவ்வருடத்தின் ஹஜ் யாத்திரைக்கு இலங்கையிலிருந்து எவருமில்லை

### அனுப்புவதில்லை என முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் தீர்மானம்

இலங்கையிலிருந்து இம்முறை ஹஜ் யாத்திரைக்கு எவரையும் அனுப்புவதில்லை என முஸ்லிம் சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் 06

பொருளாதார நெருக்கடி
டொலர் பற்றாக்குறை
காரணம் எனவும் தெரிவிப்பு

நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது அவசியம்

# 21ஆவது திருத்தம் நிறைவேறியதும் புதியதொரு அரசியலமைப்பு

### அனைத்து தரப்பினரும் இணங்கும் வகையில் உருவாக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அனைத்துத் தரப்பினரும் இணங்கக் கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்க முடியுமென நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

21ஆவது அரசியலமைப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படுவதையடுத்து அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி நாட்டில் ஜனநாயகத்தைப் பலப்படுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உத்தேச 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா ராமான்ய மகா நாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**திங்களன்று அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமுல்படுத்த உள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மகாநாயக்க தேரர்களிடம் தெரிவிப்பு**

நாட்டில் தற்போது நிலவும் 06





இலங்கை இராணுவத்தின் 24 ஆவது தளபதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள லெப்டினன் ஜெனரல் எச்.எல்.வி.எம் லியனகே, நேற்று (01) இராணுவ தலைமையகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட போது....

GMOA

அத்தியாவசிய மருந்துகளை அவசரமாக
**இறக்குமதி செய்யாவிடின் எதிர்காலத்தில் சிக்கல் நிலை** 03

## ரிஷாத் பதியுத்தீன் எம்.பிக்கு வெளிநாடு செல்ல அனுமதி

### கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொதுமக்களின் நிதியை துஷ்பிரயோகம் செய்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள்அமைச்சர் றிஷாட் 06

## பரீட்சைக்கு தோற்றிய மாணவி துன்புறுத்தல்

### பூரண விசாரணைக்கு அமைச்சர் சுசில் உத்தரவு



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவி ஒருவர் துன்புறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பரீட்சைகள் ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அநுராதபுரம் ஹிதோகம பாடசாலை 06

## துமிந்த சில்வா கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

துமிந்த சில்வா நேற்று கைது செய்யப்பட்டார். ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.



துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி 06

## அமரவீர மற்றும் நிமலின் கட்சி பதவிகளுக்கு ஆபத்து

**SLFP தலைவர் மைத்திரி அதிரடி நடவடிக்கை**



கட்சியின் தீர்மானத்தை மீறி அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமைகள் நீக்கப்படவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார். 06

## சீரற்ற வானிலை; ஒருவர் உயிரிழப்பு

### 144 குடும்பங்கள் பாதிப்பு



நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்ததாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடமைகளை நிறைவுசெய்து வீடு திரும்பிக்கொண்டிருந்த நிவாரண சேவை அதிகாரி ஒருவர், 06



அரச ஊழியர்கள்
**வசதியான ஆடைகளில் கடமைக்கு சமுகமளிக்க அனுமதி** 03



21 ஆவது திருத்தத்தின் இறுதி வரைபு தொடர்பாக
**கட்சித் தலைவர்கள் உட்பட எம்.பிமாருக்கு இன்று விளக்கம்** 03

## மேலும் 03 இலங்கையர் தமிழகத்தில் தஞ்சம்

### மார்ச் முதல் சென்றவர்கள் 83 ஆக அதிகரிப்பு



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

கொழும்பு தெமட்டகொடை பகுதியை சேர்ந்த 03 பேர் இராமேஸ்வரத்துக்கு 06

## திங்கள் முதல் பஸ் சேவைகள் இடம்பெறுவது கேள்விக்குறி!

### ஈடுபடாது என்கிறார் கெமுனு விஜேரத்ன



உரிய முறையில் டீசலை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் எதிர்வரும் 6ம் திகதி முதல் அனைத்து தனியார் பஸ்களும் சேவையிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுமென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். க.பொ.த சாதாரண தர பரீட்சை 06

## மின்சார பட்டியலுக்கு மாதம் ஒரு சிலிண்டர்

### லிற்றோ நிறுவனம் புதிய திட்டம் வகுப்பு


**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சார கட்டண பட்டியலை அடிப்படையாக வைத்து ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு சமையல் எரிவாயு சிலிண்டர் என்ற அடிப்படையில் விநியோகிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக 06

VAT வரி அதிகரிப்பின் எதிரொலி:

## மதுபானம்,சிகரட் விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு



மதுபானம் மற்றும் சிகரட் விலைகள் ஜூன் 1ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வற் வரி அதிகரிப்பின் காரணமாக உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையினால் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சிகரெட்டின் வகைக்கேற்ப விலை உயர்வும் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல பாடகர் KK மாரடைப்பால் மரணம்

### இசை நிகழ்வில் துயர சம்பவம்



இந்தியாவின் புகழ்பெற்ற பாடகர்களில் ஒருவரான கேகே என அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத் நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமானார்.

இந்தியத் திரையுலகின் பலமொழி பாடகர்களில் ஒருவரான கேகே என்று அழைக்கப்படுபவரான பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல 06



# சர்வதேச செய்திகள்

## உக்ரைனுக்கு மேம்பட்ட ரொக்கெட் அமைப்பை அனுப்ப அமெ. முடிவு



### ரஷ்ய அணு ஆயுதப் படை ஒத்திகை

உக்ரைன் தன்னை தற்காத்துக் கொள்வதற்கு உதவியாக அந்நாட்டுக்கு அதிக மேம்பட்ட ரொக்கெட் அமைப்புகளை வழங்கவிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

தனது எதிரிப்படைகளை நீண்ட தூரத்தில் இருந்து அதிக துல்லியமாக தாக்குவதற்கு இந்த ஆயுதங்களை தரும்படி உக்ரைன் நீண்ட காலமாக கோரி வந்தது.

எனினும் இந்த ஆயுதங்களைக் கொண்டு ரஷ்யாவில் உள்ள இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தினால் இந்தக் கோரிக்கையை அமெரிக்கா இன்று வரை மறுத்து வந்தது.

ஆனால் நேற்று புதன்கிழமை கருத்துக் கூறிய பைடன், சக்திவாய்ந்த ஆயுத உதவிகள் உக்ரைனின் ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைக்கான நிலையை வலுப்படுத்தும் என்றும் இராஜதந்திர தீர்வு ஒன்றுக்கு அதிக வாய்ப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதி இருக்கும் பைடன் கூறியிருப்பதாவது, "இதன் காரணமாகவே உக்ரைனில் உள்ள போர்க் களத்தில் முக்கிய இலக்குகளை அதிக துல்லியமாக தாக்குவதற்கு முடியுமாகும் வகையில் உக்ரைனியர்களுக்கு மேம்பட்ட ரொக்கெட் அமைப்புகள் மற்றும் வெடிபொருட்களை வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்" என்றார். இந்த புதிய ஆயுதங்களில் எம்1 42 உயர் நடமாட்ட பீரங்கி ரொக்கெட் அமைப்பும் இருப்பதாக வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதில் எத்தனை ஆயுதங்கள் வழங்கப்படும் என்பது பற்றி குறிப்பிட்டு கூறப்படவில்லை.

இந்த அமைப்பு மூலம் உக்ரைனிடம் தற்போது இருக்கும் பீரங்கிகளை விடவும் 45 மைல்களுக்கு அப்பால் உள்ள இலக்குகளை பல துல்லியமான வழிகாட்டல் ஏவுகணைகள் மூலம் தாக்க முடியும். இதனை ஒத்து ரஷ்யாவிடம் இருக்கும் அயுதங்களை விடவும் இது அதிக துல்லியமானது என்று நம்பப்படுகிறது.

இந்த ரொக்கெட் அமைப்பு ரஷ்ய ஏவுகணை தாக்குதல்களுக்கு பதில் அளிப்பதில் தீர்க்கமானதாக இருக்கும் என்று உக்ரைன் இராணுவத் தளபதி கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது மோதல் உக்கிரமாக இருக்கும் கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் உக்ரைன் இந்த ஆயுதங்களை நிலைநிறுத்தும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. இதன் மூலம் ரஷ்ய பீரங்கி படைகள் மற்றும் உக்ரைனிய நகரங்களில் இருக்கும் படைகளை தாக்க இது பயன்படுத்தப்படலாம்.

ரஷ்யாவுக்குள் இருக்கும் இலக்குகள் மீது தாக்குதல் நடத்த இந்த ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை என்ற உத்தரவாதத்தின் அடிப்படையிலேயே அமெரிக்கா இந்த ரொக்கெட்டுகளை வழங்க இணங்கியுள்ளது.

"ரஷ்யாவை தாக்கக்கூடிய ரொக்கெட் அமைப்புகளை நாங்கள் உக்ரைனுக்கு அனுப்பப்போவதில்லை" என்று பைடன் குறிப்பிட்டுள்ளார்.

பைடனின் இந்த அறிவிப்பு வெளியான விரைவில், ரஷ்யாவின் அணு ஆயுதப் படை மொஸ்கோவுக்கு அருகில் இருக்கும் இவானோவோ மாகாணத்தில் ஒத்திகையை நடத்தியதாக ரஷ்ய இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனிய தேசியவாதிகளுக்கு ஆயுதங்களை குவித்து வருவதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கி லவ்ரொவ் முன்னதாக குற்றம்சாட்டி இருந்தார். உக்ரைனை நோக்கி ஆயுதங்களுடன் வரும் எந்த ஒரு சரக்கும் ரஷ்யாவின் இலக்குகளாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பும் நேட்டோ நாடுகள் "நெருப்புடன் விளையாடுகிறது" என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சு எச்சரித்தது.

## பாகிஸ்தானுக்கு ஐ.நா எச்சரிக்கை



ஆப்கானிஸ்தானைத் தளமாகக் கொண்ட தஹ்ரிக்கே தலிபான் பாகிஸ்தான் அமைப்பு பாகிஸ்தானுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பு ஆப்கானில் இருக்கும் தமது ஆயிரக்கணக்கான போராளிகளுடன் பாக். அரசுக்கு எதிரான நீண்ட கால நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்தி வருவதாக பாதுகாப்பு சபை கண்காணிப்பு குழு அறிக்கையை மேற்கோள் காட்டி டோன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தலிகான்கள் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து நன்மை பெறும் குழுவாக இந்த அமைப்பு இருப்பதாக பாதுகாப்பு சபை சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜூன் 5இல் காஷ்மீரில் இருந்து ஹஜ் பயணம்



ஜம்மு காஷ்மீரில் இருந்து 2022 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஹஜ் விமானம் வரும் ஜூன் 5 ஆம் திகதி ஸ்ரீநகர் சர்வதேச விமானநிலையத்தில் இருந்து புறப்படவுள்ளது.

தொந்தரவற்ற முறையில் ஹஜ் பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்திய ஹஜ் குழு செய்திருப்பதோடு ஹஜ் கடமையில் ஈடுபட எதிர்பார்ப்பவர்களுக்கான அனைத்து வசதிகளும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இம்முறை ஹஜ் கடமையில் இந்தியாவில் இருந்து 83000 முஸ்லிம்களும் காஷ்மீரில் இருந்து கிட்டத்தட்ட 7000 முஸ்லிம்களும் பங்கேற்கின்றனர்.

## ஓடும் ரயிலில் பெண் கற்பழிப்பால் பரபரப்பு



ஓடும் ரயிலில் மூன்று ஆடவர்களால் இளம் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்ட சம்பவம் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆளில்லாத ரயில் பெட்டிக்குள் டிக்கெட் பரிசோதகர் ஒருவரால் இழுத்துச் செல்லப்பட்ட 25 வயதான இரு குழந்தைகளின் தாய் ஒருவர் மூவரால் கற்பழிக்கப்பட்டதாக ரயில் பொலிஸ் தலைவர் பைசால் ஷஹ்கார் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரு சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் செவ்வாயன்று மூன்றாமவரையும் கைது செய்ததாக ஷஹ்கார் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் 14,000க்கும் அதிகமான பெண்கள் கற்பழிக்கப்பட்டிருப்பதோடு இது தினசரி சுமார் 11 சம்பவங்களாக உள்ளது. எனினும் மூன்று வீதத்திற்கும் குறைவான தாக்குதல்தாரிகளே குற்றங்காணப்படுவதாக உத்தியோகபூர்வ தரவுகள் காட்டுகின்றன.

## பலஸ்தீன பெண் இஸ்ரேலிய படையினரால் சுட்டுக்கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் கத்தி ஒன்றுடன் இஸ்ரேலிய படை வீரர் ஒருவரை அச்சுறுத்தியதாகக் கூறப்பட்ட பலஸ்தீன பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கத்தியுடன் வந்த தாக்குதல்தாரி ஒருவர் இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர் ஒருவரை நோக்கி முன்னேறி வந்ததாகவும் பதில் நடவடிக்கையாக படையினர் சூடு நடத்தியதாகவும் இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டது.

இந்த கூற்றை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என்று ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ஹெப்ரோனின் அருகில் இருக்கும் பலஸ்தீன நகரில் உள்ள மருத்துவமனை ஒன்று அந்தப் பெண்ணின் மரணத்தை உறுதி செய்தது.

அவர் சிறிய கத்தி ஒன்றுடல் சிறிய அளவு அச்சுறுத்தலாகவே இஸ்ரேலிய படையினருக்கு இருந்தார் என்று சம்பவத்தை பார்த்த ஒருவர் அல் ஜசீரா தொலைக் காட்சிக்கு தெரிவித்தார். அல் அரூப் கிராத்திற்கு அருகில் கொல்லப்பட்ட 31 வயதான பெண் இந்த ஆண்டு ஆரம்பத்தில் சிறிது காலம் இஸ்ரேலிய சிறையில் இருந்தவர் என்று பலஸ்தீன கைதிகள் கழகம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன வன்முறை அண்மைய மாதங்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் இஸ்ரேலிய படையினரால் 59 பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. பலஸ்தீனர்கள் நடத்திய தாக்குதல்களில் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் 19 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## ஷங்ஹாய் நகரில் முடக்கம் தளர்வு



கொரோனா தொற்று பரவல் காரணமாக இரண்டு வாரங்களாக முடக்கப்பட்டிருந்த சீனாவின் ஷங்ஹாய் நகரில் முடக்கநிலை தளர்த்தப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு வீட்டில் அடைந்து கிடந்த ஷங்ஹாயின் சுமார் 26 மில்லியன் குடியிருப்பாளர்களில் பெரும்பாலானோர் நேற்று முதல் வெளியே செல்லமுடியும். மக்கள் வேலையிடங்களில் இருந்தவாறு வேலைசெய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

அங்கு கடைகளும் சில பாடசாலைகளும் மீண்டும் திறக்கப்படுகின்றன. பொதுப் போக்குவரத்து மீண்டும் முழுமையாகச் செயல்படவுள்ளது.

இருப்பினும் ஷங்ஹாயில் சுமார் அரை மில்லியன் பேர் அண்மையில் வைரஸ் தொற்று ஏற்பட்டோருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததால் தொடர்ந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

## சுவீடன், பின்லாந்து நேட்டோவில் இணைவதற்கு துருக்கி நிபந்தனை



சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகளின் நேட்டோவில் இணையும் விண்ணப்பத்திற்கு துருக்கியின் ஆதரவை பெற அந்த நாடுகள் தமது சட்டங்களில் திருத்தங்களை கொண்டுவர வேண்டும் என்று துருக்கி வெளியுறவு அமைச்சர் மவ்லுத் கவுசொக்லி நிபந்தனை விதித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பை அடுத்தே இந்த இரு நாடுகளும் நேட்டோவில் இணைய விண்ணப்பித்துள்ளன.

எனினும் கடந்த ஏழு தசாப்தங்களாக நேட்டோ அங்கத்துவம் பெற்றிருக்கும் துருக்கி, தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை இரு நோர்டிக் நாடுகளின் இணைவுக்கான எதிர்ப்பு கைவிடப்படமாட்டாது என்று குறிப்பிட்டுள்ளது.

குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி உட்பட துருக்கியால் பங்கரவாத குழுக்களாக அறிவிக்கப்பட்ட அமைப்புகளுக்கு சுவீடன் மற்றும் பின்லாந்து அடைக்கலம் அளிப்பதாக துருக்கி குற்றம்சாட்டுகிறது.

இந்த குழுக்கள் மீது அளிக்கும் ஆதரவை கைவிடும்படி இந்த இரு நாடுகளையும் துருக்கி வலியுறுத்துகிறது.

நோட்டோவில் இணைவதற்கு அதன் 30 அங்கத்துவ நாடுகளும் ஒருமனதாக ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கெமரூனில் பிரிவினைவாதிகள் தாக்குதல்: 24 சிவிலியன் பலி



கெமரூனின் பதற்றம் மிக்க அங்லோபோன் பிராந்தியத்தில் பிரிவினைவாத துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் இருபத்து நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டு மேலும் 60 பேர் காயமடைந்திருப்பதாக உள்ளூர் மேயர் தெரிவித்துள்ளார்.

பிரிந்து சென்ற இந்தப் பிராந்தியத்தில் அரச படைகள் மற்றும் ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கு இடையே கடந்த ஐந்து ஆண்டுகளால் இடம்பெற்று வரும் மோதல்களில் அதிக உயிரிழப்புக் கொண்ட தாக்குதல்களில் ஒன்றாக இது உள்ளது. நைஜீரியாவுடனான எல்லைக்கு அருகில் இருக்கும் ஒபோயி என்ற கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

"குடியிருப்பாளர்கள் ஒவ்வொரு மாதமும் தமக்கு பணம் செலுத்த வேண்டும் என்று பிரிவினைவாதிகள் எதிர்பார்க்கின்றனர். அவர்கள் அதனை மறுத்ததாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது" என்று மேயர் எக்வாலே மார்டீன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சிலர் நைஜீரியாவுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

## பிரேசில் மழை வெள்ளம்: உயிரிழப்பு நூறாக உயர்வு



வடகிழக்கு பிரேசிலில் அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

ரெசிப் நகருக்கு வெளியில் உள்ள பின்தங்கிய பகுதியில் நிலச்சரிவு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலச்சரிவுகளை உள்ளூர் மக்கள் சுனாமிக்கு ஒப்பிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை வெள்ள நீர் புகுந்த பகுதிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பல டஜன் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றனர். மேலும் உடல்கள் கண்டுபிடிக்கபட வாய்ப்பு இருப்பதாக மீட்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து 14 பேர் காணாமல் போன நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்ட பெர்னம்புக்கோ மாநில அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெர்னம்புக்கோவின் குறைந்தது 24 மாநகர சபைகளில் அவசர நிலை அறிவிக்கப்பட்டிருப்பதோடு 6,000க்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளை இழந்து அல்லது தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.



நாட்டில் கடந்த மார்ச் 31 மற்றும் மே 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இடம் பெற்ற வன்முறை சம்பவங்களால் ஏற்பட்ட சொத்துக்கள் சேதம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளார். உச்சநீதிமன்ற நீதிபதி பீ.பி. அலுவிஹாரவின் தலைமையில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க, மேலதிக பிரதம மதிப்பீட்டாளர் என். ஏ. எஸ் .வசந்தகுமார ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் புவனேக ஹேரத் குழுவின் செயலாளராக செயற்படவுள்ளார்.(ஸ)

### மருந்து பற்றாக்குறையை விரைவில் தீர்க்க

# இந்திய மற்றும் WB, WHO, ADB கடனுதவிகளைப் பயன்படுத்தவும்

## கோப் குழுவின் தலைவர் பரிந்துரை



இந்தியக் கடனுதவி மற்றும் ஏனைய கடனுதவிகளைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஹேரத் பரிந்துரை வழங்கினார்.

மே மாதம் 13ஆம் திகதி வரையில் அரச வைத்தியசாலைகளில் நிலவிய மருந்துப் பற்றாக்குறை குறித்தும், அதனை நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தபோதே (31) அவர் இந்தப் பரிந்துரையை வழங்கினார்.

இந்தியக் கடனுதவியில் 200 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்தாலும்

06

### 21 ஆவது திருத்தத்தின் இறுதி வரைபு தொடர்பாக

# கட்சித் தலைவர்கள் உட்பட எம்.பிமாருக்கு இன்று விளக்கம்

## நீதி அமைச்சர் விஜயதாசராஜபக்ஷ தெளிவூட்டுவார்

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேதாசராஜபக்ஷ , இன்று (02) வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி தலைவர் உள்ளிட்ட தரப்பினருக்கு தெளிவுபடுத்தவுள்ளார்.

இதன் பின்னர் 21 ஆவது திருத்த சட்ட வரைபு திருத்தங்களை உள்வாங்குவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெறும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாசராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பில் மே 27 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன் போது அனைத்து கட்சிகளுக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டதோடு , பல திருத்தங்களும் முன்வைக்கப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் இணக்கப்பாடொன்று எட்டப்படாத நிலையில் இம்மாதம் 3 ஆம் திகதி தமிழ் தேசிய

06

### அத்தியாவசிய மருந்துகளை அவசரமாக

# இறக்குமதி செய்யாவிடின் எதிர்காலத்தில் சிக்கல் நிலை

## GMOA அரசாங்கத்திற்கு எச்சரிக்கை

நாட்டில் பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசிய மருந்துகளை விரைவில் இறக்குமதி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) தெரிவித்துள்ளது. தற்போது 12 முதல் 20 வரை அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியர் சமின் விஜேசிங்க கூறியுள்ளார்.

அத்தோடு, 120 முதல் 150 வரை அத்தியாவசியமற்ற மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்த

# 369 பொருட்களை இறக்குமதி செய்ய நேற்று முதல் அனுமதி

## நிதியமைச்சு விசேட வர்த்தமானி அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இறக்குமதிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த 369 பொருட்களுக்கான இறக்குமதி அனுமதி நேற்று முதல் மீண்டும் வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கடந்த மார்ச் மாதம் 09ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் அத்தியாவசியப்

06

# அரச ஊழியர்கள் வசதியான ஆடைகளில்

## கடமைக்கு சமுகமளிக்க அனுமதி



எரிபொருள் மற்றும் எரிசக்தியை சேமிக்கவும் மாற்றுப் போக்குவரத்து முறைகளை பயன்படுத்துவதற்கு வசதியாகவும், அரச அலுவலகங்களுக்கு சமுகமளிக்கையில் சீருடைக்கு பதிலாக வசதியான ஆடையில் கடமைக்கு வர அனுமதிக்கப்பட வேண்டுமென பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடு சவாலான நிலையை எதிர்நோக்கும் இத்தருணத்தில் பாரம்பரிய அரச சேவைகளுக்கு அப்பால் சென்று அனைவரும் தமது சேவைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்ட போதே அவர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில், அரச சேவையை, இணையவழி அரச சேவையாக (E Public Service) மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. காகித பயன்பாட்டை மட்டுப்படுத்த இந்த இணையவழி தொழில்நுட்பம் முக்கியமானது. இந்த நேரத்தில் நாட்டுக்காக ஒரு டொலரையேனும் சேமிப்பதற்கு அனைத்து பிரஜைகளும் உறுதியாக இருக்க வேண்டும்.

அத்துடன், நாட்டில் காணப்படுகின்ற எரிபொருள் நெருக்கடியால் எதிர்காலத்தில் உணவுப் பொருட்களிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்திலும், பொது நிலங்களிலும், வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளிலும் பயிரிடுவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்க அதிபர்கள் உடனடியாக வகுக்க வேண்டும் என்றும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மத்தள, இரத்மலானை சர்வதேச விமான நிலையங்களை மூடிவிட எதிர்பார்ப்பு

## விமான சேவைகள் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் நிதிநெருக்கடியை கவனத்திற்கொண்டு மத்தள சர்வதேச விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையத்தை மூடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக விமான சேவைகள் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

அதுதொடர்பில் கருத்து தெரிவித்த விமான சேவைகள் அமைச்சின் உயரதிகாரி – பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மேற்படி விமான நிலையங்களின் பராமரிப்பு மற்றும் ஏனைய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. அதேவேளை, குறிப்பிட்டளவு விமானங்கள் இந்த விமான நிலையங்களுக்கு வருகை தராமையால் அந்த விமான நிலையங்களைத் தொடர்ந்தும் நடத்திச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் தற்போது பெரும் சிக்கல்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

குறிப்பாக மேற்படி இரண்டு விமான நிலையங்களினதும் ஊழியர்கள் மற்றும் ஆளணியினரைக் கொண்டு நடத்துவது மற்றும் ஏனைய செலவுகளை மேற்கொள்வதில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தின் சேவைகளுக்காக ஊழியர்களை அழைத்துச் செல்வதற்கு சொகுசு பஸ் வண்டியொன்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தினமும் மத்தள விமான நிலையத்துக்கு போக்குவரத்தை மேற்கொள்வதானது பெரும் செலவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்ற ரத்மலானை விமான நிலையமும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இயங்குகின்றது.

இரத்மலானை விமான நிலையம் அண்மையில் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தப்பட்டது. எனினும் அன்றைய தினம் வெள்ளோட்டமாக மாலைதீவின் மக்கள் விமானம் ஒன்று வருகை தந்தது. எனினும் அவ்விமானம் மீண்டும் பயணிகளின்றி வெற்று விமானமாகவே சென்றுள்ளது. அன்றைய தின நிகழ்விற்காக 80 இலட்சம் ரூபா செலவு ஏற்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

## முதற்கட்ட உற்பத்தி நடவடிக்கைகள் நேற்று தொடங்கியது

லோரன்ஸ் செல்வநாயகம்

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த இரண்டு தினங்களுக்கு முன் மேற்படி நிலையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்த போதும் நேற்று மீண்டும் அதனை ஆரம்பிக்க முடிந்துள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன்படி முதல்தடவையாக நேற்று எண்ணெய் உற்பத்தி நடவடிக்கைகள் நடைபெற்றதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே வேளை தவறான தகவல்களை பிரசாரப்படுத்தாமல் அமைச்சுக்கு யோசனைகளை முன்வைக்க முடியுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். பெற்றோலிய உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் அமைச்சுக்கும் கடந்த மாதத்தில் 70 யோசனைகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்தகையை அனைத்து யோசனைகளும் உயர்மட்ட அரச அதிகாரிகளைக் கொண்ட குழுவினரின்ஆய்வுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த யோசனைகளில் பெரும்பாலானவை தொழில்நுட்ப தேவைகள் தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். பெருமளவு யோசனைகளில் எரிபொருளுக்காக நிதியை வழங்குதல் தொடர்பிலும்

06

### ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர்

# மீனவர்களுக்கான எரிபொருள் தேவைகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் போன்ற அடிப்படை தேவைகளை உச்சளவில் பெற்றுக்கொள்வது தொடர்பாக விரைவில் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது ஆராய்ந்து சாதகமான முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிச் சூழலில், கடற்றொழில் அமைச்சுக்குள் உள்ளடங்கியுள்ள திணைக்களங்களினால் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடற்றொழில் அமைச்சில் நேற்று (01) நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

"தற்போதைய சூழலில், எம்மிடம் இருக்கின்ற உற்பத்திசார் வேலைத்திட்டங்களை தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முன்கொண்டு சென்று வருமானத்தை உருவாக்குவதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான கடலுணவு தாராளமாக நியாயமான விலையில் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கடற்றொழில்சார் மக்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் வகையில், கடற்றொழில் அமைச்சு சார்ந்த அதிகாரிகளின் செயற்பாடுகள் அமைய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்கஃதா பிறை 01



**குறள் தரும் சிந்தனை**

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்

இன்பம் வரும் பொழுது அதற்காக ஆட்டம் போடாத வர்கள், துன்பம் வரும் பொழுதும் அதற்காக வாட்டம் கொள்ள மாட்டார்கள். இரண்டையும் ஒன்றுபோல் கருதும் உறுதிக்கு இது எடுத்துக்காட்டு.

# பொருளாதார நெருக்கடியில் மக்களுக்கு நிவாரணம் அளிக்க விசேட நடவடிக்கை

இன்றைய காலகட்டத்தில் நாடு முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியானது, மக்களின் அன்றாட வாழ்வில் தாக்கங்களையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது. அதற்கு இப்பொருளாதார நெருக்கடி தோற்றுவித்துள்ள விளைவுகள் நல்ல எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

அதாவது இப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக எரிபொருள், எரிவாயு அடங்கலாக அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு அந்நிய செலாவணி பற்றாக்குறை முக்கிய காரணியாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலையில் அத்தியாவசிப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகளும் பெரிதும் அதிகரித்து காணப்படுகின்றன.

இந்நிலைமையின் விளைவாக நாட்டின் எல்லா மட்டத்திலுள்ள மக்களும் பொருளாதார ரீதியில் அழுத்தங்களுக்கும் தாக்கங்களுக்கும் முகம் கொடுத்து இருக்கின்றனர். அதன் காரணத்தினால் இந்த நெருக்கடிக்கும் தாக்கங்களுக்கும் தீர்வும் நிவாரணமும் கோரி ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் மேற்கொள்ளும் நிலைக்கு மக்கள் உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான சூழலில், நாடு ஏற்கனவே முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடிகளை தணித்து நாட்டில் பொருளாதார இயல்பு நிலையை ஏற்படுத்திய அனுபவங்களைக் கொண்டுள்ள தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் புதிய பிரதமராகவும் நிதியமைச்சராகவும் அண்மையில் பதவியேற்றுக் கொண்டுள்ளார். தற்போதைய பொருளாதார நெருக்கடி மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து அவர் விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இதன் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்களையும் அவர் முன்னெடுத்துள்ளார்.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அத்தியாவசியமான பொது சேவைகளை இடையூறுகள் இன்றி பேணுவதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு குறைநிரப்பு பிரேரணையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான யோசனையை அவர் முன்வைத்துள்ளார். அந்த யோசனைக்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. தற்போதைய சூழலில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய யோசனை என்பது மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

இந்த யோசனைக்கு அமைய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் ஆதரவு சேவைகள் மற்றும் அவசர காலப் பொறுப்பு திட்டங்களின் கீழ் 695 பில்லியன் ரூபா வழங்கப்பட உள்ளது. இதன் ஊடாகப் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் இயன்றவரை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ளது.

அதேநேரம், 2022 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சமுர்த்தி பயனாளிகள், பெருந்தோட்ட மக்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கென சலுகைப் பொதி அடங்கிய வரவு செலவுத்திட்டம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. அதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் அத்தியாவசிய அரச சேவைகளை இடையூறுகள் இன்றி தொடர்ச்சியாக முன்னெடுக்கவும் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த குறைநிரப்பு மதிப்பீட்டை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு இருக்கின்றது.

இந்நடவடிக்கையின் ஊடாக மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவதை அரசாங்கம் மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தி இருக்கின்றது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கை குறித்து மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளன.

நாடு முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்சி பெற வேண்டும். அதுவே தமது பொருளாதார விமோசனத்திற்கு வழி என்பதுதான் ஒவ்வொருவரதும் கருத்தாக உள்ளது. அதற்கு ஏற்பவே வேலைத்திட்டங்களும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியில் மக்கள் முகம் கொடுக்கும் அழுத்தங்களையும் தாக்கங்களையும் தணித்து தவிர்ப்பதே இந்நடவடிக்கைகளின் ஒரே இலக்காக உள்ளது.

அதனால் தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது மக்களின் எதிர்பார்ப்பாகும். அதன் ஊடாக இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து நிவாரணமும் மீட்சியும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆகவே நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான பற்றுக் கொண்ட ஒவ்வொரு குடிமகனும் இப் பொருளாதாரநெருக்கடியின்தாக்கங்களைகுறைத்து கட்டுப்படுத்த முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதனைத் தம் பொறுப்பாகவும் கடமையாகவும் கருதி செயற்படுவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# புதிய இராணுவத் தளபதியாக லெப். ஜெனரல் விக்கும் லியனகே கடமைகளை பொறுப்பேற்பு

இலங்கையின் 24 ஆவது இராணுவத் தளபதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தனது கடமைகளை நேற்று (01) உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள இராணுவ தலைமையத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்த புதிய இராணுவத் தளபதியை இராணுவத்தின் பிரதிப் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் ஜனத் கொடிதுவக்கு வரவேற்றார்.

இராணுவத்தின் நிறைவேற்று ஜெனரலான மேஜர் ஜெனரல் சுவர்ண போத்த புதிய தளபதியை விஷேட மேடைக்கு அழைத்துச் சென்றார். அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட மரியாதை அணிவகுப்பை புதிய தளபதி ஏற்றுக் கொண்டார். இராணுவத் தளபதி பிரதிநிதித்துவப்படுத்தும் இராணுவத்தின் கஜபா படைப்பிரிவினரால் விஷேட மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.

அதனைத் தொடர்ந்து இராணுவத் தளபதியின் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர், நான்கு மதவழிபாடுகளுக்கு மத்தியில் சுபவேளையில் முதலாவது ஆவணங்களில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வமாக 24 ஆவது தளபதியாக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.









மிகவும் எளிமையான முறையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புதிய இராணுவத் தளபதியின் மனைவி திருமதி ஜானகி லியனகே, குடும்ப உறவினர்கள், மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தளபதிகள், இராணுவத்தின் உயர் அதிகாரிகள் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாத்தளை விஜய கல்லூரியில் கல்வி பயின்ற லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, 1986 ஒக்டோபர் 27 ஆம் திகதி கெடெட் அதிகாரியாக இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டதுடன் தியத்தலாவையில் உள்ள இராணுவக் கல்லூரி மற்றும் பாகிஸ்தான் இராணுவக் கல்லூரியில் ஆரம்ப பயிற்சிகளை முடித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து இரண்டாவது லெப்டினன்ட்டாக கஜபா ரெஜிமன்டிற்கு நியமிக்கப்பட்டார்.

இலங்கை இராணுவத்தில் 35 ஆண்டு காலம் சேவையாற்றும் கீர்த்திமிகு உயர் இராணுவ அதிகாரியான இவர், நான்காவது கஜபா ரெஜிமன்ட்டின் பொறுப்பதிகாரி, அதிகாரி, படைப்பிரிவின் தளபதி, பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரி உட்பட இராணுவத்தின் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார். லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேசியா நாடுகளில் பாதுகாப்பு மற்றும் துறைசார் பயிற்சிகளை முடித்துக் கொண்டுள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் போது 57 மற்றும் 56 படைப்பிரிவுகள் 8 ஆவது கஜபா ரெஜிமன்ட்டின் கட்டளை தளபதியாக செயற்பட்ட விக்கும் லியனகே, புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது பல்வேறு வெற்றிகளைக் கண்டுள்ளார்.

அத்துடன் ரணவிக்ரம, ரனசூர பதக்கங்கள், கிழக்கு மனிதாபிமான நடவடிக்கை பதக்கம், வடக்கு_ கிழக்கு நடவடிக்கை பதக்கம் உட்பட பல்வேறு உயர் பதக்கங்களை பெற்றுள்ளார். இதேவேளை, பாதுகாப்புப் படைகளின் புதிய பிரதம அதிகாரியாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கான பிரியாவிடை மரியாதை அணிவகுப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இராணுவத் தளபதி பதவிக்கு உரித்தான விஷேட வாளை ஜெனரல் ஷவேந்திர சில்வா புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியகேவிடம் சம்பிரதாய முறைப்படி கையளித்ததுடன், இராணுவத் தளபதியின் உத்தியோகபூர்வ புகைப்படத்தையும் திரைநீக்கம் செய்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஸாதிக் ஷிஹான்...

# ‘நாற்திசையும் டயலொக்’ செயற்திட்டத்தின் கீழ் அம்பகஹபெலஸ்ஸவில் புதிய டயலொக் கோபுரம்

இலங்கை முழுவதிலும் உள்ள கிராமப்புற சமூகங்களுடனான தொடர்பை விரிவுபடுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டிற்கு அமைய இலங்கையின் பரந்த வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, நாற்திசையும் டயலொக் முயற்சியின் கீழ், கண்டி அம்பகஹபெலஸ்ஸ கிராமத்தில் ஒரு கோபுரத்தை அண்மையில் நிறுவியது.

## 2021 இல் 1028 கிராமங்கள் மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கான இணைப்பை மேம்படுத்துகிறது

அம்பகஹபெலஸ்ஸ பிரதேசத்திலுள்ள சமூகங்களின் கல்வி மற்றும் தொழில் அபிலாஷைகளை மேம்படுத்துவதில் நம்பகமான இணைப்புக்கான அணுகலை வழங்குவதற்காக இந்த வலையமைப்புத் தளம் நிறுவப்பட்டது. 2021 இல் ‘நாற்திசையும் டயலொக்’ செயல்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குநர், நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொடர்பாடல் சேவையை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான தனது முயற்சிகளின் ஒரு பகுதியாக 1028 கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமப்புற சமூகங்களுக்கான இணைப்பை மேம்படுத்தியுள்ளது.







கண்டி மாவட்டத்தில் அம்பகஹபெலஸ்ஸ கோபுரத்துடன் சேர்த்து உல்பத்கமவிலும் தொடர்பாடல் கோபுரம் நிறுவப்பட்டது. மேலும், மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல, புலனவெவ மற்றும் கனிமயாய ஆகிய இடங்களிலும் களுத்துறை மாவட்டத்தில் மொரப்பிட்டிய, அத்வெல்தொட்ட, வலகெதர மற்றும் கித்துல்கொட ஆகிய பிரதேசங்களிலும் புதிய சேவை கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த நெருக்கடியான காலத்தில் தொலைத்தொடர்பு வசதியை விரிவுபடுத்துவதற்கும் வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதற்குமான தனது தொடர் முயற்சிகளின் அங்கமாக, டயலொக் 3,000 இற்கும் மேற்பட்ட தளங்களை தரமுயர்த்தியுள்ளதுடன், 453 புதிய கோபுரங்களை 2021 இல் உருவாக்கியது. அதன் ‘நெட்வேர்க்’ இல் தற்போது 4,380 மொபைல் 4G தளங்கள் காணப்படுகின்றன. இது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கோபுரங்களின் அதிகூடிய எண்ணிக்கையாகும். டயலொக் கிரீன் ஃபீல்ட் கோபுரங்களில் தனது சேவை கிடைப்பதை விரைவாக விரிவடையச் செய்து, தொலைதூர கிராமப்புற சமூகங்களைச் சென்றடையவும், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் அவசரத் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் Lamp Pole தீர்வுபாயங்களை பயன்படுத்தவும் செய்தது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 95% இற்கும் அதிகமான மக்கள் தொகையை இலக்காகக் கொண்டு டயலொக் தொடர்ந்து இலங்கை முழுவதும் கவரேஜை மேம்படுத்தும்.

# நீரில் மூழ்கி உயிரிழக்கும் பரிதாபங்கள் கிழக்கில் சமீப காலமாக அதிகரிப்பு

## அலட்சியம், அறியாமையினால் தொடரும் அகால மரணங்கள்!

இலங்கையில் வீதி விபத்துக்களின் மூலமாக உயிரிழப்புகளின் தொகை வேகமாக அதிகரித்துக் கொண்டு செல்கின்ற நிலையில் , சமீப காலமாக கிழக்கு மாகாணத்தில் நீரில் மூழ்கி இறப்போரின் தொகையும் அதிகரித்துச் செல்கின்றது.

ஆறு , குளம் , நீச்சல்தடாகம் மற்றும் கடலில் மூழ்கி இறப்போரில் இளைஞர்களின் தொகையும் சிறுவர்களின் தொகையும் அதிகமாகவே காணப்படுகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் நீரில் மூழ்தலுடன் தொடர்புடைய இறப்புகள் மற்றும் நீர்ப்பாதுகாப்பின் தேவை போன்றவற்றின் அடிப்படையிலான அறிக்கையின்படி சர்வதேச அளவில் இலங்கையில் நீரில் மூழ்கி இறப்போரின் தொகை அதிகமாகவே காணப்படுகின்றது.

மது அருந்திக் கொண்டு நீர்நிலைகளில் நீராடச் செல்வது , எச்சரிக்கை அறிவித்தல்கள் அபாயகரமான பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவற்றை கண்டு கொள்ளாமல் உதாசீனப்படுத்தும் நிலைமையே காணப்படுகின்றது. மகிழ்ச்சியுடன் பொழுது போக்குவதற்காக ஆறுகள் , நீர்வீழ்ச்சிகள் மற்றும் கடலில் விடுமுறை நாட்களில் அதிகமானோர் ஒன்றுகூடுவது வழமையானது. இதனால் தமது பாதுகாப்பை எவரும் ஒரு பொருட்டாக கவனத்திற் கொள்ளாமையே இவ்வாறான விபரீதங்களுக்கு பிரதானமான காரணமாக அமைகின்றது.

இலங்கையில் அதிகமான கடற்கரை பிரதேசங்கள் காணப்பட்டாலும் அவை யாவும் மக்கள் நீராடுவதற்கு உகந்தவையாக இருப்பதில்லை.இருந்தும் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்



தில் நிலாவெளி, உப்புவெளி, அரிசிக்கடல், பளிங்குக்கடல், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அறுகம்பை போன்ற அழகான பாதுகாப்பான கடற்கரைகள் நீராடுவதற்கு காணப்படுகின்றன.

நீர் வளத்தை பாதுகாப்பது மட்டும் மனிதர்களுடைய கடமையல்ல. அந்த நீர் வளத்தை எவ்வாறு பாதுகாப்பாக பயன்படுத்துவது மற்றும் கையாள்வது என்பது தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நீச்சல் மற்றும் நீராடுவதற்கு பொருத்தமற்ற மற்றும் அபாயகரமான பகுதிகளை இனங்கண்டு அவற்றை அடையாளப்படுத்த வேண்டிய அவசரத் தேவை தற்போது எழுந்துள்ளது.

வெளிப்பிரதேசங்களில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு சுற்றுலா வரும் இளைஞர்கள் குழு மற்றும் குடும்பத்தினர் தாம் நீராடும் இடங்களை அப்பிரதேசத்திலுள்ள மக்களிடம் கேட்டறிந்து கொள்ள வேண்டும். தமக்கு பரிச்சயம் இல்லாத இடங்களில் நீர்நிலைகளின் ஆழம், கடல்அலையின் வேகம், கடல்கொந்தளிப்பு, காலநிலை அவதான நிலையம் விடுத்திருக்கும் அறிவித்தல்களை அறிந்திராமையும் நீரில் மூழ்கி உயிரிழப்பதற்கு காரணமாக அமைகின்றது.

சில சந்தர்ப்பங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் உயிரிழக்கும் சந்தர்ப்பங்களையும் நாம் அறிந்துள்ளோம். ஒரு குடும்பத்தில் பலர் உயிரிழப்பதால் அந்தக் குடும்பம் அனுபவிக்கும் துன்பங்களை எவராலும் தாங்கிக் கொள்ள முடியாது. குளங்களில் மற்றும் நீர்வீழ்ச்சியில் நீராடும் போது அதன் மேற்பகுதியில் அதிக மழை பெய்யும் வேளையில் அல்லது வான்கதவுகள் திறக்கும் வேளையில் திடீரென்று நீர்மட்டம் அதிகரிக்கக் கூடும். அந்த வேளையிலும் திடீர் அனத்தம் ஏற்பட்டு உயிரிழந்தவர்களும் உள்ளனர்.

நீராடும் போது பல பேர் ஒரேயடியாக கைகோர்த்துக் கொண்டு நீரில் இறங்குவதாலும், ஒருவர் நீரில் மூழ்கும் போது மற்றவர்கள் அவரைக் காப்பாற்ற செல்வதாலும் அதிகமான இழப்புகள் ஏற்படுகின்றன. இதனால் ஒருவர் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படும் போது உதவிக்குச் செல்வோரும் நீரின் உள்ளே இழுபட்டு செல்லும் நிலையும் ஏற்படும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# லண்டனில் 'விம்பம்' அமைப்பு ஏற்பாட்டில் 11 ஆம் திகதி மலையக இலக்கிய மாநாடு

இலங்கையின் மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் கொடூர சுரண்டலு க்குள்ளாகும் தொழிலாளர்கள் பற்றி 1974 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அமைப்பின் சார்பில் எடித் பொன்ட் என்ற பெண்மணி இலங்கையில் ஆய்வு மேற்கொண்டு 'தேயிலையின் நிலை ' என்ற தலைப்பில் வெளியிட்ட ஆய்வறிக்கை இங்கிலாந்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

கிரநாடா தொலைக்காட்சி ஒளிபரப்பிய தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்நிலை பற்றிய நிகழ்ச்சியும் உலக அரங்கில் மலையகத் தொழிலாளரின் வாழ்நிலையினை வெளிப்படுத்தியது. இலங்கை என்றால் தேயிலை என்றும் தேயிலை என்றால் அங்கு வாழும் தொழிலாளர்களின் ஈன நிலைதான் என்ற சித்திரமுமே இங்கிலாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் நிலவியது.

இலங்கையில் 1980 களில் தமிழ் ஆயுதக் குழுக்களின் போராட்டம் வெடித்தெழுந்த போது உலக அரங்கில் இலங்கைத் தமிழ் மக்களுக்கான உரிமைகள் முன்னுரிமை பெற்றன.

இந்நிலையில் , ஐரோப்பாவின் இலக்கியச் சந்திப்பு மலையக இலக்கியம் பற்றிய பிரக்ஞையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்துள்ளது. மலையகத் தமிழர்களின் நிலை, தாயகம் திரும்பிய தமிழர்களின் நிலை பற்றி பெர்லின் இலக்கியச் சந்திப்பில்(1989) நிகழ்ந்த உரையாடல் முக்கியமானது. நடேசையர் நூற்றாண்டு நிறைவையொட்டி (1987)பெர்லினில் அப்பெரியார் நினைவு கூரப்பட்டமை மலையகம் பற்றிய சிந்தனையை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல உதவிற்று.

## மலையகம் சார்ந்த 26 நூல்கள் அறிமுகம்; நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளிலிருந்து உரைஞர்கள் பங்கேற்பு

மலையகத்தின் சிறுகதைச் சிற்பியான அமரர் என்.எஸ்.எம்.ராமையா அவர்களின் 'கோயில்' என்ற சிறுகதை இலக்கியச் சந்திப்பில் கலைச் செல்வனால் வாசிக்கப்பட்டு, அக்கதை ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதையும் நினைவுபடுத்துவது பொருந்தும்.

பாரிசில் நிகழ்ந்த என்.எஸ்.எம்.ராமையாவின் நினைவுப் பேருரையும், 'மலையகப் பரிசுக்கதைகள்' நூல் வெளியீடும் (1995)பாரிசில் இடம்பெற்ற முக்கிய மலையக இலக்கிய நிகழ்வுகளாகும். நெதர்லாந்திலும் 'மலையகப் பரிசுக் கதைகள்' வெளியீடு நிகழ்த்தப்பட்டு , மலையக எழுத்தாளர்கள் பரந்த அறிமுகம் பெறுவதற்கான வாய்ப்பை நல்கியது.

லண்டனில் மாத்தளை சோமுவின் நூல்களை 'புதினம்' ராஜகோபால் வெளியிட்டு, அவரது பல நூல்களை லண்டனில் அறிமுகப் படுத்த உதவியிருந்தார். மலையக இலக்கியம் பற்றிய மாத்தளை சோமு அவர்களின் இலக்கிய உரையும் பொருள் பொதிந்ததாக இருந்தது.

லண்டனில் நடைபெற்ற 'மலையகப் பரிசுக் கதைகள்' நூல் வெளியீட்டில் பேராசிரியர்.சிவசேகரம், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், நடிகர் சிலோன் சின்னையா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

'மலையகத்தின் நூற்றாண்டுத்துயர்' என்ற தொனிப்பொருளில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் தெளிவத்தை ஜோசப், விஜயசிங்கம், வழக்கறிஞர் செல்வராஜ் ஆகியோர் பங்காற்றி சிறப்புச் சேர்த்தனர்.

லண்டனில் இர.சிவலிங்கம் அவர்களின் மறைவிற்கான அஞ்சலி நிகழ்வில் எஸ்.முத்தையா, எஸ்.வி.ராஜதுரை, எம்.நேமிநாதன், என்.சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை மலையகக்கல்விமான் ஒருவருக்கு புகலிட தமிழர் சமூகம் அளித்த பெருங்கௌரவமாக அமைந்தது.



நெதர்லாந்தில் 'கலைஒளி' முத்தையாபிள்ளை அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவுதினப் பேருரையை (1998) கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் நிகழ்த்திச் சிறப்பித்தார்.

நோர்வேயில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பு நிகழ்வில் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் 50 ஆண்டு நிறைவு குறித்த உரையாடல் ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் வி.நடராஜா தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது.

லண்டனில் நடைபெற்ற 'கூலித்தமிழ்' வெளியீட்டு நிகழ்வில் அம்ஷன்குமார், வழக்கறிஞர் செ.சிறிக் கந்தராசா, இரா.ராமலிங்கம்,எம்.என்.எம்.அனஸ் , மாதவி சிவலீலன் ஆகியோர் கலந்து சிறப்பித் திருந்தனர். 'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா ராம்ராஜ் தலைமையில் லண்டனில் நடைபெற்ற போது, இலங்கையிலிருந்து எச்.எச்.விக்ரமசிங்க கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையகம் குறித்த இந்நிகழ்வுகளின் உச்சகட்ட வளர்ச்சியின் வெளிப்பாடாக ஜுன் மாதம் 11 ஆம் திகதி 'விம்பம்' அமைப்பு ஒழுங்கு செய்திருக்கும் முழுநாள் மலையக இலக்கிய மாநாடு திகழ்கிறது.

காத்தாயி, கோகிலம் சுப்பையா, இர.சிவலிங்கம், சோ.சந்திரசேகரம் சி.வி.வேலுப்பிள்ளை, தமிழோவியன், சாரல்நாடன் ஆகியோரின் நினைவரங்குகளில் மலையகம் சார்ந்த 26 நூல்கள் அறிமுகம் பெறுகின்றன. நாவல், சிறுகதை, கவிதை, கூத்து, அரசியல், சமூகவியல், சட்டம் சார்ந்த பல்துறை நூல்கள் இந்த மாநாட்டில் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். ந.சரவணன், க.ஆதவன், கரவைதாசன், சுகன், டொக்டர்.தம்பிராஜா, யமுனா ராஜேந்திரன், வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா, வி.சிவலிங்கம், பாலசுகுமார், ப.சந்தோஷ், எஸ்.தினேஷ்குமார், எம்.என்.எம்.அனஸ், எம்.பௌசர், ராகவன், பெ.சிவஞானம், மயூரன், மாதவி சிவலீலன், நவஜோதி யோகரட்னம், தோழர் வேலு, கோகுலரூபன், நா.சபேசன், மாஜிதா, அஞ்சனா, பாரதி சிவராஜா, வேணி சதீஸ், பூங்கோதை, மீனாள் நித்தியானந்தன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து அணி சேர்க்கிறார்கள். சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் வெளியீடு இம்மாநாட்டின் பிரதான நிகழ்வாக அமைகிறது. சி.வி.யின் இக்கட்டுரைகள் தினகரனில் வெளியாகி 65 ஆண்டுகள் கடந்த நிலையில், மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோர் இந்த நூலைப் பதிப்பித்துள்ளனர்.

## தினகரனில் 65 வருடங்களுக்கு முன்னர் பிரசுரமான அமரர் சி.வி. வேலுப்பிள்ளை எழுதிய கட்டுரைகள் தற்போது மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகியோரின் ஏற்பாட்டில் பதிப்பிக்கப்பட்டு வெளியீடு



சாம் பிரதீபனின் 'மெய்வெளி' நாடக அரங்கின் தயாரிப்பில் 'காத்தாயி காதை' நாடகம் மாநாட்டின் முக்கிய கலைநிகழ்வாக மேடையேறுகிறது. றஜீதா பிரதீபன் நாடகத்தில் பிரதம பாத்திரமேற்றுச் சிறப்பிக்கிறார்.

மலையகச் சிறார்களின் ஓவியக் கண்காட்சியும் மலையக நூல், சஞ்சிகைகள் கண்காட்சியும் இம்மாநாட்டின் மற்றுமிரு முக்கிய அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன.

**மு.நித்தியானந்தன்...**

# நாவலப்பிட்டி மண்ணையும் மக்களையும் உயிராக நேசித்து வாழ்ந்த கந்தசாமி ஆசிரியர்

விளையாட்டின் முக்கியத்துவத்தை உணர்வுபூர்வமாக நேசித்து வாழ்ந்த உதாரண புருஷராக ராஜன் கந்தசாமி அவர்கள் விளங்குகிறார். தன் ஆரோக்கியத்திலும் சமூக ஆரோக்கியத்திலும் பொதுவான மனிதராக தன்னை நிலைநிறுத்தி அவர் வாழ்ந்துள்ள வாழ்க்கை சிறப்பிற்குரியது.

1930.12.06 யாழ்ப்பாணம் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் கோவிலடியில் ராஜன்_ செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக ராஜன் கந்தசாமி பிறந்தார். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை கற்ற நிலையில், விளையாட்டுத்துறையுடன் கூடிய பயிற்சி நெறியை 1953 இல் இந்தியா மெட்ராஸ் Y. M. C. H பிசிகல் கல்லூரியில் கற்றார்.

பாடசாலைக் காலங்களிலேயே சிறந்த குறுந்தூர ஓட்டவீரராக விளங்கியதுடன், உதைபந்தாட்ட அணியிலும் இணைந்து சிறப்பாக பங்காற்றியுள்ளார். 1955 இல் உடற்கல்வி ஆசிரியராக நியமனம் பெற்ற ராஜன் கந்தசாமி, தொழில் நிமித்தமாக யாழ்ப்பாணத்திலிருந்து நாவலப்பிட்டிக்கு புலம்பெயர்ந்தார். நாவலப்பிட்டி சென் மேரிஸ் கல்லூரியிலேயே ராஜன் கந்தசாமிக்கு உடற்கல்வி ஆசிரியராக நியமனம் கிடைத்தது. அன்று தொடக்கம் 1990. 12. 06ஆம் திகதி வரை தனது ஆசிரியர் சேவையில் நீடித்திருந்தார். தொடர்ச்சியாக இப்பாடசாலையிலேயே ஆசிரியராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது

பாடசாலை விளையாட்டுத்துறை வளர்ச்சியில் இவரது பங்களிப்பு அதிகம். உதைபந்தாட்ட விளையாட்டை நேசித்தவர் என்ற வகையில் சென் மேரிஸ் கல்லூரியை உதைபந்தாட்ட துறையில் வழிப்படுத்தி அத்துறையில் பாடசாலை சமூகம் ஈடுபாடு கொள்ள தூண்டியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் உதைப்பந்தாட்ட அணியில் தேசிய மட்ட போட்டிகளிலும் இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்களின் சாதனைகள் படைத்துள்ளார்கள். 1955இல் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் 1972 இல் யாழ் பலாலி ஆசிரியர் கலாசாலை தன் தொழில் விருத்திக்கான பயிற்சியை நிறைவு செய்து கொண்டார்.

## அளவெட்டியில் பிறந்து, மலையகத்தில் விளையாட்டுத்துறையை கட்டியெழுப்பிய பெருந்தகை மறைந்தார்

1959 இல் ராஜேஸ்வரி அம்மையாரை திருமணம் முடித்தார். ஆசிரியர் தொழிலின் முன்மாதிரியான செயற்பாட்டாளரான இவர் 1990. 12. 0 6 இல் ஓய்வு பெற்றார். தொடர்ந்தும் சென்மேரிஸ் கல்லூரியிலும், நாவலப்பிட்டி சமூகத்திலும் கந்தசாமி என்ற நாமம் நிலைத்து நிற்கின்றது. சென்மேரிஸ் கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து 'நாவலப்பிட்டி சென் மேரியன்ஸ்' விளையாட்டுக் கழகத்தை அமைத்தார். அந்த அமைப்பின் வளர்ச்சியில் ராஜன் கந்தசாமியின் பங்கு அளப்பரியதாகும். நாவலப்பிட்டியில் விளையாட்டுத் துறையில் குறிப்பாக உதைப்பந்தாட்ட வளர்ச்சியில் அக்கழகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். அமைப்பை நீண்ட காலம் வளிப்படுத்தியவர் ராஜன் கந்தசாமி. நாவலப்பிட்டி உதைபந்தாட்ட சங்கம், கண்டி மாவட்ட உதைபந்தாட்ட சங்கம், அகில இலங்கை உதைபந்தாட்ட சங்கம் ஆகியவற்றில் நீண்ட காலம் இணைந்து தொழிற்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு நாவலப்பிட்டி பிரதேசங்களில் பல விளையாட்டுக் கழகங்கள் உருவாவதற்கும் முன்னின்று உழைத்தார். இப்பிரதேசத்தின் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்பிப்பாளராக இவரது வகிபாகம் என்றும் நினைவில் நிற்கின்றது. கண்டிப்பான மொழியில் விளையாட்டு வீரர்களை முறையாக போட்டிகளில் வழிப்படுத்துவதிலும் இவருக்கு நிகர் இவரே ஆவார்.





நாவலப்பிட்டியில் எல்லா இன மக்களின் மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமானவராக ராஜன் கந்தசாமி விளங்கினார். தனது 91 ஆவது வயதில் 2022.02. 12 அன்று தான் பிறந்த ஊரான அளவெட்டிக்கு சென்றிருந்த நிலையில் திடீர் சுகயீனம் காரணமாக இம்மண்ணை விட்டு பிரிந்தார். அன்னாரின் பிரிவுத்துயர் நாவலப்பிட்டி மக்களை மிகவும் துயரத்தில் ஆழ்த்தியது. இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒரு பொதுமொழியாகவே 'கந்தசாமி சேர்' என்ற நாமம் நிலைத்திருப்பதை காண முடிகிறது. 1955 01.18 அன்று தொழில் நிமித்தமாக நாவலப்பிட்டிக்கு வருகை தந்த அன்னார் இப்பிரதேசத்தை நேசித்து, இம்மக்கள் மனதில் அன்பை விதைத்தவர் சமூக சமயப் பணிகளில் மக்களை இணைத்துக் கொண்டு செயல்பட்டவர். அவரினால் வளர்க்கப்பட்ட வீரர்கள் இன்று பொலிஸ், இராணுவம் சேவைகளிலும் உள்ளனர். இந்த பிரதேசத்தில் சமாதானத்தின் அடையாளமாக, மனிதநேயமிக்க மனிதராக வாழ்ந்தவர் அவர். நாவலப்பிட்டி மக்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 4 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வை நாவலப்பிட்டி சகுறா மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

**அ. லெட்சுமணன்...**
*அமைப்பாளர்,*
*நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்*

# குடற்புண் உபாதையிலிருந்து விடுபடுவதற்கு நமது சீரிய வாழ்க்கை முறையே அருமருந்து

இன்றைய காலத்தில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கூறுகின்ற ஒரு பொதுவான பிரச்சினை 'எனக்கு அல்சர்' என்பதாகும். உண்மையில் அல்சர் என்பது புண் எனப்படும். எனவே 'வயிற்றுப்புண்' என்பதே சரியான வார்த்தைப் பிரயோகமாகும். இதைத் தவிர குடல்புண் என்றும் சித்தமருத்துவத்தில் 'குன்மம்' என்றும் கூறப்படுகின்றது.

பொதுவாக இந்நோயில் நெஞ்செரிவு, வயிறு எரிதல், வயிற்றுப் பொருமல், வயிறு ஊதல், வயிற்றில் இரைச்சல், வயிறு நோதல், சமிபாடின்மை, பசியின்மை, வாந்தி போன்ற பல்வேறு உபாதைகள் காணப்படும்.

நாம் ஓய்வெடுக்கக் கூட நேரமின்றி தற்காலத்திற்கு ஏற்ற வகையில் ஓடிக் கொண்டிருக்கின்றோம். பதவிகள், பட்டங்கள், பணம், ஆடம்பர வாழ்வு, கேளிக்கைகள் போன்றவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை எமது ஆரோக்கியம், மனஅமைதி, துன்பமற்ற வாழ்க்கை போன்றவற்றுக்கு கொடுத்திருக்கின்றோமா?

பிரதானமாக எமது உணவுப் பழக்கவழக்கங்களே குடல்புண் ஏற்படக் காரணமாகின்றது. தகுந்த நேர இடைவெளியில் உணவு உள்ளெடுக்காமை, நீண்ட நேரத்தின் பின் உணவு உண்ணல், அதிகமாக பட்டினி இருத்தல், அடிக்கடி விரதம், அதிக காரமான உணவுகளையும், அதிக சூடான உணவுகளையும் உண்ணல், உட்கொண்ட உணவு சரியாக சமிபாடடைய முன் அடுத்த வேளை உணவை உண்ணல், ஊட்டச்சத்து இன்மை, மதுபாவனை, அதிக மருந்துகளை உள்ளெடுத்தல், வலி மாத்திரைகளை அடிக்கடி உண்ணல் போன்றவற்றைக் கருதலாம்.

இதைத் தவிர வேறு நோய்களுக்கு பாவிக்கும் மருந்துகளின் தாக்கத்தாலும், மனக்கவலை, பயம், துக்கம், மனச்சோர்வு, நித்திரையின்மை போன்றவற்றாலும் இரைப்பையில் சுரக்கப்படும் அமிலத்தின் அதிகரித்த தாக்கத்தால் சமிபாட்டுடன் தொடர்புடைய இரைப்பை மற்றும் முன்சிறுகுடலின் உட்சுவரில் அழற்சி ஏற்பட்டு அந்நிலை தொடர்வதால் வயிற்றுப்புண் ஏற்படலாம். இதனை உரிய நேரத்தில் தீர்க்காவிட்டால் நாளடைவில் இரைப்பை அல்லது குடல் சார்ந்த புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்து அதிகம் உள்ளது.



எனவே எமது நாளாந்த உணவுப்பழக்க வழக்கங்களை சீராக அமைத்துக் கொள்வதன் மூலம் இந்நோய் ஏற்படாமல் தவிர்க்கலாம் அல்லது ஏற்பட்ட நோயை இலகுவில் குணப்படுத்தலாம்.

சரியான நேரத்திற்கு உணவு உண்ணும் பழக்கத்தை பின்பற்ற வேண்டும். காலை எட்டு மணிக்குள்ளும், மதியம் ஒரு மணிக்குள்ளும், இரவு எட்டு மணிக்குள்ளும் உள்ளெடுக்கும் உணவு உடலிற்கு மிகவும் நன்மை தரும். காலையுணவு கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

அதிகளவு நீர் அருந்த வேண்டும். அதிகாலையில் எழுந்தவுடன் நீர் அருந்த வேண்டும். இரவில் சிறிதளவு வெந்தயத்தை அல்லது சீரகத்தை சுத்தமான நீரில் ஊற வைத்து காலையில் ஊறிய வெந்தயம் அல்லது சீரகத்துடன் சேர்த்து நீரையும் வெறும் வயிற்றில் பருகிவரலாம். வாரத்தில் மூன்று நாட்கள் காலையில் வெறும் வயிற்றில் தேங்காய் பால் அளவாக அருந்தலாம். காலை 6 மணியளவில் அறுகம்புல் சாறு, வில்வமிலைச்சாறு, வல்லாரை இலைச்சாறு, சாம்பல் பூசணிச் சாறு, வாழைத்தண்டுச்சாறு, மாதுளம் பழச்சாறு, திராட்சைப் பழச்சாறு இவற்றில் ஏதாவது ஒரு சாற்றை வீட்டிலேயே தயாரித்து தினமும் அருந்தி வரலாம்.

## உணவுப் பழக்கத்தை முறைப்படி கடைப்பிடிப்பதுடன் கோபம், மனப்பதற்றம், உளச்சோர்வு தவிர்ப்பதும் பிரதானம்

நெல்லிக்காயை ஜூஸ் செய்து தயிர் கலந்து அருந்துதலும் நன்மை தரும். மோர், தயிர், இளநீர், தர்ப்பூசணி, வெள்ளரி, நுங்கு போன்றனவும் உள்ளெடுக்கலாம்.

மதிய உணவாக நன்கு வேகவைத்த சோறு, மோர் சாதம், மற்றும் புழுங்கல் அரிசி வடித்த கஞ்சியில் சிறிதளவு உப்புச் சேர்த்து அருந்தலாம். அல்லது இக்கஞ்சியுடன் சிறிதளவு அதிமதுரப்பொடி சேர்த்து அருந்தலாம். அல்லது புழுங்கல் அரிசியுடன் உள்ளி, சிறிதளவு வெந்தயம், சீரகம் சேர்த்து கஞ்சியாக அருந்தலாம். நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்களையும், முள்ளங்கி, புடோல், பூசணி, முட்டைக்கோஸ், கொத்தமல்லி, பிரண்டை, அத்திக்காய், பாகற்காய், வெண்டைக்காய், நீத்துப்புசணிக்காய் கறி, பாசிப் பயறு அல்லது துவரம் பருப்பு சேர்த்த கீரைக் கூட்டு, வாழைப்பூ பயறு சேர்த்த கூட்டு, தண்டுக் கீரை, வெந்தயக்கீரை, அம்மான்பச்சரிசிக் கீரை, வாழைப்பூ சூப், அகத்திக்கீரை சூப், மணத்தக்காளி சூப் அல்லது மணத்தக்காளி கீரைக்கறி அல்லது மணத்தக்காளி கூட்டு, கருவேப்பிலைக் கூட்டு, புதினா சட்னி அல்லது புதினா சாதம் அல்லது புதினா துவையல் போன்றனவும் உண்ணலாம்.

சமையலில் காரத்தை இயன்றளவு குறைக்க நற்சீரகத்தூள் அல்லது மல்லித்தூள் அல்லது கறிமஞ்சள்தூள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். ஏலம், சுக்கு, கராம்பு, சீரகம் போன்றவற்றை சமவளவு எடுத்துப் பொடியாக்கி தினமும் இருவேளை அரை தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வரலாம். அல்லது மாங்கொட்டையின் உட்பருப்பை காயவைத்து பொடியாக்கி மேற்கூறிய எவு தேனுடன் இருவேளை சாப்பிட்டு வரலாம். அவ்வாறே அரை தேக்கரண்டி மிளகுப்பொடியை அல்லது சீரகப்பொடியை தேனில் கலந்து சாப்பிட்டு வரலாம்.

மேலும் மனக்கவலை, பயம், மனச்சோர்வு, பதற்றம் போன்றன ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். குறைந்தது தினமும் ஆறு தொடக்கம் எட்டு மணித்தியாலமாவது நித்திரை கொள்வதை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். மனஅமைதியை ஏற்படுத்த மூச்சுப்பயிற்சி, தியானம், யோகா போன்றவற்றில் ஈடுபடலாம். கோபம் ஏற்படாது இயன்றளவு தவிர்க்க வேண்டும். ஏனெனில் கோபத்தால் இரைப்பையில் அமிலத்தின் சுரப்பு அதிகமாகி வயிற்றுப்புண்ணின் தாக்கத்தை அதிகரிக்கலாம். துரித உணவுகளான நூடில்ஸ், ப்ரைட் ரைஸ், பர்கர், பீட்சா அதிக புளி, மசாலா சேர்ந்த மற்றும் காரமான உணவுகள், வடை, முறுக்கு, பூரி போன்ற எண்ணெயில் பொரித்த உணவுகள், அதிக சூடான உணவுகள், கோப்பி, டீ, சொக்லேட், ஐஸ்கிறீம், சோடா, பால், புளிப்பான பழங்கள், ஊறுகாய், மிளகாய் வற்றல், சிவப்பு இறைச்சி, ஐஸ் தண்ணீர், குளிர்பானங்கள் போன்றவற்றை தவிர்த்தல் சிறப்பு. மதுபானம், புகையிலைப் பாவனை தவிர்க்கப்படல் அவசியம்.

வைத்திய கலாநிதி
செல்வி **வினோதா சண்முகராஜா...**,
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

கலாநிதி **திருமதி கௌரி ராஜ்குமார்...**,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## 21வது திருத்தம் நிறைவேறியதும்...

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள், 21ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன் போது நீதியமைச்சரால் மகாநாயக்க தேரருக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

2015ஆம் ஆண்டு 19ஆவது அரசியல் திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் அந்த சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றன. அதற்கமைய 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்படும் போது அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுவதுடன் அதன்மூலம் ஜனநாயகத்தையும் பலப்படுத்த முடியும்.

அந்தவகையில் 21ஆவது அரசியலமைப்பு திருத்த சட்ட மூலத்தை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதற்கு இடைப்பட்ட நாட்களில் அச் சட்டமூலம் தொடர்பில் மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசியல் செய்வதற்கு நாடு ஒன்று அவசியமாகும். அந்த வகையில் நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு அனைவரும் கட்சி, அரசியல் பேதங்களின்றி ஒன்றிணைவது அவசியம் என்றும் இதன்போது மகாநாயக்க தேரர் நீதியமைச்சரிடம் அறிவுறுத்தியுள்ளார்.

## 21 ஆவது திருத்தம் எனது...

இருந்து வந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

உத்தேச அரசியலமைப்பின் 21வது திருத்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜேதாசராஜபக்ஷ 21வது திருத்தம் தொடர்பில் முதலில் விளக்கமளித்திருந்தார்.

இரட்டைக் குடியுரிமையை நீக்குதல் உள்ளிட்ட 21வது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கங்கள் குறித்து அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார்.

## றிஷாத் பதியுத்தீன் எம்.பிக்கு வெளிநாடு...

பதியுதீனுக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 03ஆம் திகதி வரை வெளிநாட்டுப் பயணத்திற்கான அனுமதியை கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

றிஷாட் பதியுதீனுக்கு வெளிநாட்டுப் பயணத்துக்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு அவரது சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் குழு விடுத்த வேண்டுகோளை கவனத்திற் கொண்டே மஜிஸ்திரேட் நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அதேவேளை, அவர் வெளிநாடு செல்லும் போது குடிவரவு குடிவரவு திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு அது தொடர்பில் தெரிவிக்க வேண்டுமென்றும் வெளிநாடு சென்று திரும்பியதும் உடனடியாக கடவுச் சீட்டை நீதிமன்றத்துக்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் முன்னாள் கணக்காளர் அழகரட்ணம் மனோரஞ்சன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிராக மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது 222 பஸ்கள் மூலம் தமது தேர்தல் தொகுதியான சிலாவத்துறைக்கு 12,620 பேரை அழைத்துச் சென்றமை தொடர்பில் 95 இலட்சத்துக்கும் அதிகமான அரச நிதியை துஷ்பிரயோகம் செய்துள்ளாரென்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்தின் மூலம் முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் 17ஆம் திகதி மீண்டும் விசாரணை நடைபெறும்போது சம்பவத்தோடு சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## இவ்வருடத்தின் ஹஜ் யாத்திரைக்கு...

தெரிவித்துள்ளது. இம்முறை இலங்கையர்கள் 1585 பேர் ஹஜ் யாத்திரை செல்வதற்கு சவூதி அரேபியா அனுமதி அளித்திருந்தது.

எனினும், டொலர் பற்றாக்குறை காரணமாக, இவ்வருடம் இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரைக்கு எவரையும் அனுப்புவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பரீட்சைக்கு தோற்றிய...

பரீட்சை நிலையத்தில் கடந்த 25ஆம் திகதி பரீட்சைக்குத் தோற்றிய மாணவியொருவர் பரீட்சை மேற்பார்வையாளரால் துன்புறுத்தப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அந்த மாணவி தனது தாயுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதன்படி கண்காணிப்பாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேலும் 03 இலங்கையர் தமிழகத்தில்...

அகதிகளாக சென்றுள்ளனர். இதனைத்தொடர்ந்து 3 பேர் மீதும் தமிழக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடி அருகே கோதண்டராமர் கோவில் பகுதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை காலை 03 அகதிகள் இருப்பதாக மண்டபம் கடலோர காவல் படை பொலிஸாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவர்களை மீட்டு கடலோர பாதுகாப்பு குழுமம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். அவர்கள் கொழும்பு, தெமட்டகொடை பகுதியை சேர்ந்த வரதன் என்பவருடைய மனைவி ஜெசிந்தா மேரி (வயது 51), மகன் பிரவீன் சஞ்சய் (10), லோகநாதன் என்பவருடைய மகன் அனிஸ்டன் (31) என தெரியவந்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தொடர்ந்து தங்களால் கூலி வேலை செல்ல முடியாமல் உணவுக்கு தவித்து வந்ததாகவும், இதனால் இந்தியா சென்று பிழைத்துக் கொள்ளலாமென முடிவு செய்து நேற்று முன்தினம் மாலை மன்னார் பகுதியிலிருந்து பணம் கொடுத்து கண்ணாடி இழை படகில் சென்றதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

03 இலங்கையரும் 1995ஆம் ஆண்டு முதல் 2017 வரை தமிழகத்திலுள்ள குடியாத்தம் அகதிகள் முகாமில் இருந்துள்ளனரென்றும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து 03 பேர் மீதும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணைக்கு பிறகு அவர்கள் மண்டபம் அகதிகளின் மறுவாழ்வு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதையடுத்து கடந்த மார்ச் 22ஆம் திகதி முதல் இதுவரை 83 பேர் அடைக்கலம் கோரி தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திங்கள் முதல் பஸ் சேவைகள்...

காரணமாக சிரமங்களுக்கு மத்தியில் தனியார் பஸ் சேவையை முன்னெடுத்ததாகவும் பரீட்சை முடிவடைந்த பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தங்களது பஸ்களுக்கு டீசல் பெற பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. தனியார் பஸ்களுக்கான எரிபொருளை இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களூடாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார்.

## அமரவீர மற்றும் நிமலின்...

மக்களின் ஆணையை மீறியும், கட்சியின் கொள்கைகளிலிருந்து விலகியும் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளோரின் கட்சி உறுப்புரிமைகள் நீக்கப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோரே இவ்வாறு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபல பாடகர் KK...

மொழிகளில் பாடல்களை பாடியுள்ளார்.

கேரளாவை சேர்ந்த 53 வயதான பாடகர் கேகே, தமிழ் சினிமாவில் 50க்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். திரைத்துறையில் அறிமுகமாவதற்கு முன்னர் 3,500 விளம்பரங்களுக்கு அவர் பாடல் பாடியுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசையில் 1997 ஆம் ஆண்டு வெளியான மின்சார கனவு படத்தில் இடம் பெற்ற 'ஸ்ட்ரா பெர்ரி கண்ணே' பாடல் மூலம் தமிழில் கேகே அறிமுகமானார். அந்த பாடலை அவர் பெபிமணியுடன் இணைந்து பாடியிருப்பார்.

மேலும் யுவன் சங்கர் ராஜா, தேவா, வித்யாசாகர், மணி சர்மா மற்றும் ஹரிஸ் ஜெயராஜ் உள்ளிட்டோர் இசையிலும் தமிழில் அவர் பாடியுள்ளார். காதல் வளர்த்தேன் (மன்மதன்), அப்படி போடு (கில்லி), காதலிக்கும் ஆசை (செல்லமே), நினைத்து நினைத்து (7ஜி ரெயின்போ காலனி), உயிரின் உயிரே (காக்க காக்க) உள்ளிட்ட அவர் பாடிய பாடல்கள் தமிழக ரசிகர்கள் இடையே பிரபலமானவை.

இந்நிலையில், கொல்கத்தா மாநகரின் நஸ்ருல் மஞ்சா பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற கேகே, ரசிகர்கள் முன்னிலையில் பாடல்களை பாடினார்.

அவருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். கச்சேரி முடிந்ததும் மயங்கி விழுந்த அவர் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாரடைப்பால் அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

அவர் கடைசியாக பங்கேற்றிருந்த மேடை இசை நிகழ்ச்சி குறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆனது.

பாடகர் கேகே திடீர் மரணம் அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும், மிகுந்த சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அவரது மறைவுக்கு பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய பிரதமர் மோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், பிரபல பாடகர் கேகே என்று அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத்தின் அகால மறைவு வருத்தமளிக்கிறது. அனைத்து வயதினரையும் கவர்ந்த அவரது பாடல்கள் பலவிதமான உணர்ச்சிகளை பிரதிபலித்தன. அவரது பாடல்கள் மூலம் நாம் எப்போதும் அவரை நினைவில் கொள்வோம். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இதேபோல் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, மத்திய மந்திரிகள் அமித்ஷா, அனுராக் தாகூர், கிரிக்கெட் வீரர் வீரேந்திர செவாக் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## சீரற்ற வானிலை; ஒருவர்...

இரத்தினபுரி, குருவிட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு, உயிரிழந்தாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி – கிரியெல்ல பகுதியில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மேலும் சீரற்ற காலநிலையினால் 6 மாவட்டங்களில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, 236 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் நேற்றைய தினம் தெரிவிக்கப்பட்டது.

## மஹிந்தவை டெல்லிக்கு...

டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடக்கவிருக்கும் பொதுக் கூட்டமொன்றில் பேசுவதற்கு முன்னாள் பிரதமர் மஹிந்தவுக்கு சந்தர்ப்பம் வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுப்பிரமணியம் சுவாமி தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிடுகையில்,

"எனது நண்பரும் இலங்கைத்தலைவருமான மஹிந்தராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறும் டெல்லியில் பொதுக் கூட்டத்தில் பேசவும், இந்து மற்றும் பௌத்த ஆலயங்களுக்குச் செல்லவும் அழைப்பு விடுக்க நான் முடிவு செய்துள்ளேன். அவர் ஜூன் மாதத்தில் வருவார் என்று நம்புகிறேன்" என்றும் பதிவிட்டுள்ளார்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட...

எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறைசேரி செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதுதொடர்பான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தை பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற போது பாதிக்கப்பட்ட பகுதிகளின் மாவட்டச் செயலாளர்கள் அதில் பங்கேற்றனர்.

பிரதமரின் செயலாளருடனான பேச்சுவார்த்தையில் களுத்துறை, கம்பஹா, காலி, இரத்தினபுரி மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது பிரதமரின் செயலாளர் கருத்து தெரிவிக்கையில், வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்படைந்துள்ள மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக திறைசேரியின் நிறைவேற்று திணைக்களமானது நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தந்த மாவட்ட செயலாளர்களுக்கூடாக நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறைசேரியின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்தந்த பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டு மாவட்டங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிதி தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் பிரதமர் அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஸ)

## துமிந்த சில்வா கைது ...

வழங்கியுள்ள பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால தடை உத்தரவொன்றை பிறப்பித்தது.

துமிந்த சில்வாவை மீண்டும் சிறையிலடைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததுடன் அவருக்கான வெளிநாட்டு பயணத் தடையையும் விதித்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

அந்த பொது மன்னிப்பை இடைநிறுத்திய உயர்நீதிமன்றம் துமிந்த சில்வாவை மீண்டும் சிறையிலடைக்குமாறும் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதுடன் அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் உதவிகளை வழங்குமாறு சட்டமா அதிபருக்கும் உத்தரவிட்டது.

அதற்கிணங்க நேற்று துமிந்த சில்வா மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.(ஸ)

## மின்சார பட்டியலுக்கு...

லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் சிலர் பல சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்து அதை ஒரு வியாபாரமாக செய்வதை நிறுவனம் அவதானித்து வருவதாக தெரிவித்துள்ள நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் மேற்படி வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க விசேட வேலைத்திட்டம் ஒன்றை தற்போது தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: நெருக்கடியான தற்போதைய சூழ்நிலையில் சிலர் பல சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்து அதிக விலையில் விற்பனை செய்து வருகின்றனர். அதனால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு வினியோகத்தில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்கள் தொடர்புபட்டுள்ளதால் குழப்ப நிலைகள் உருவாகின்றன. அதனால் மக்கள் சமையல் எரிவாயுவை பலவந்தமாக பெற்றுக்கொள்ள முயற்சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## கட்சித் தலைவர்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

கூட்டமைப்பினதும் பங்குபற்றலுடன் மீண்டுமொரு கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் 21 இல் காணப்படும் சில உள்ளடக்கங்கள் தொடர்பில் பல கட்சிகளாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியினால் மேலும் சில திருத்தங்களும் நீதி அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவ்வாறு இத்திருத்தம் தொடர்பில் கட்சிகளுக்கிடையில் தெளிவற்ற நிலைமையும் , இணக்கப்பாடற்ற நிலைமையும் காணப்படுகின்ற நிலையில் , இன்று நிதி அமைச்சர் இது குறித்த தெளிவுபடுத்தல்களை வழங்குவார் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினை சமர்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் இடம் பெற்ற ஆளுங்கட்சி கூட்டத்தில் பல்வேறு நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.எவ்வாறிருப்பினும் இத்திருத்தத்தில் உள்ள சில உள்ளடக்கங்கள் தொடர்பில் தெளிவற்ற நிலைமையே காணப்படுகிறது. எனவே இது தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக சகல கட்சி உறுப்பினர்களுக்கும் வியாழனன்று நீதி அமைச்சரினால் நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் போது முன்வைக்கப்படும் முக்கிய யோசனைகளை 21 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்வாங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.

அதனையடுத்து அதனை இறுதி செய்வது குறித்த விசேட கலந்துரையாடலும் இடம்பெறும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இவ்வாரத்திற்குள் நிறைவு செய்யப்பட்டு, அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் சமர்பிக்கப்படும் என்றார்.

## இந்திய மற்றும் WB,... (03 ஆம் பக்கத் தொடர்)

2022 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையில் 55.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரமே அமைச்சின் மருத்துவ உப குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். அது நிதியுதவியின் 28% எனவும், 2022 மே 18 ஆம் திகதி வரை 92.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமான விலைப்பட்டியல் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை குழுவின் தலைவரால் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

விஷேடமாக அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் பற்றாக்குறை பொதுமக்களின் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பிரச்சினை என்பதால் தற்போதைய நெருக்கடி நிலைமையை விரைவில் தீர்த்து அத்தியாவசிய மருந்துகளைப் பொதுமக்களுக்கு வழங்கும் அவசியத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார். அதற்கமைய, அந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்குப் பரிந்துரை வழங்கினார்.

இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தற்பொழுது அது இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்கமைய அத்தியாவசிய மருந்துகளை இந்த நிதியினூடாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர். விஷேடமாக அமைச்சர்கள் சிலர் இந்தக் காலப்பகுதியில் நியமிக்கப்பட்டமையாலும் இந்தப் பணிகள் தாமதமடைந்ததாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்திய கடனுதவிக்கு மேலதிகமாக, மருந்துப் பொருட்கள் பெற்றுக்கொள்வதற்குக் கிடைத்துள்ள உலக வங்கிக் கடன் (WB), உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவி (WHO), ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி (ADB) மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைத்துள்ள உதவிகளை விரைவாகப் பயன்படுத்தாமை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. விஷேடமாக இந்தியக் கடனுதவி உள்ளிட்ட இந்த அனைத்து உதவிகளும் 330 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகம் எனவும் அவை இதுவரை செலவு செய்யப்படவில்லை என்பது இங்கு புலப்பட்டது. விரைவில் நிர்வாகத் தீர்மானங்கள் மற்றும் அனுமதியைப் பெற்று இந்த நிதியைப் பயன்படுத்தி மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்தால் 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை மருந்துப் பற்றாக்குறை ஏற்படாதென வருகை தந்திருந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

## மீனவர்களுக்கான... (03 ஆம் பக்கத் தொடர்)

இதன்போது, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து இரத்னாயக்க மற்றும் கடற்றொழில் திணைக்களம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், நக்டா, நாரா, வடகடல், சீநோர் ஆகிய திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகள், தாங்கள் எதிர்கொள்ளுகின்ற நடைமுறை சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்து கலந்துரையாடினர்.

இலங்கை மீன்பிடித் துறைமுகத்தினால், மீன்பிடி வள்ளங்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்படுவதுடன், தேவையானளவு எரிபொருட்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கடலுணவுகளை பாதுகாத்து சந்தைக்கு அனுப்புவதில் காணப்படுகின்ற சவால்கள் தொடர்பாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தான அதிகாரிகளினால் எடுத்துக் கூறினர்.

நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற இறால் பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால்கள் உட்பட, பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற கடலுணவுகளுக்கான உணவுகளை இறக்குமதி செய்வதற்கு தடையாக டொலர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று, வடகடல் மற்றும் சீநோர் ஆகிய நிறுவனங்களின் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

## 369 பொருட்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

பொருட்கள் அல்லாத 369 பொருட்களை நாட்டுக்கு இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்தி இருந்தது.

அதற்கிணங்க புதிய வரி உள்ளிட்ட சட்டங்களுக்கமைய அவற்றை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டு மேற்படி 369 அத்தியாவசிய பொருட்களை செல்லுபடியாகும் உரிமமின்றி இறக்குமதி செய்வதற்கு நேற்று அரசாங்கம் அனுமதி வழங்கி, நேற்று முதல் அது அமுலுக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள வரிகள் உட்பட பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு... (03 ஆம் பக்கத் தொடர்)

அதற்காக பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் தொடர்பிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர், பொய்ப் பிரசாரங்களின்றி சிறந்த யோசனைகளை முன்வைக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நீரில் மூழ்கி... (04ஆம் பக்கத் தொடர்)

அத்தோடு நீராடும் போது விளையாட்டாக நீருக்குள் தள்ளிவிடுதல், அமிழ்த்துதல், நீர்நிலைகளுக்கு அருகாமையில் கையடக்க தொலைபேசியில் செல்பி எடுத்தல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். நீர்நிலைகளில் நீராடும் போது மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை பாவிப்பதனை தவிர்க்க வேண்டும்.

எனவே நீச்சலின் போதும் ஏனைய நீர் விளையாட்டுகளின் போதும் பாதுகாப்பான உயிர்காப்பு உடைகளை அணிந்து கொள்வது அவசியமாகும். பெரும்பாலானோர் அபாயகரமாக பகுதிகள் என அறிந்திருந்தும் ஆறு குளங்கள், நீர்வீழ்ச்சிகள் போன்ற இடங்களுக்கு நீராடச் செல்வதால் ஒருசில நிமிடங்களில் தமது வாழ்வை இழக்க வேண்டிய பரிதாபம் ஏற்படுகின்றது.

விசர் நாய் தடுப்பு மருந்து இன்மை,

# கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் விலங்கு விசர் நாய் தடுப்பு மருந்து உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் உடனடியாக உள்ளூராட்சி மன்றங்கள் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் துறைசார் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இணையவழிக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் விலங்கு விசர் நாய் தடுப்பூசி உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே உள்ளூராட்சி சபைகள் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தாவிட்டால் அதன் காரணமாக ஏற்படும் மரணங்கள் அதிகரித்து விடும். இது தொடர்பாக அரசாங்க அதிபர் ஆளுநருடன் கலந்துரையாடி உள்ளூராட்சி சபைகள் ஊடாக கட்டாக்காலிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இணையவழிக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன்,திட்டமிடல் வைத்திய அதிகாரி மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு யாழ் மாவட்ட வைத்திய துறை எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தனர்.



சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு பேலியகொட துட்டுகெமுனு விகாரையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சமூகசேவையாளர் வக்சலா சத்தியசீலனுக்கு மனிதநேய, லங்காபுத்திரி, மாமனிதர் ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவு



**(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது தேசிய பாடசாலையான இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலையின் அதிபர் செ.பத்மசீலன் தலைமையில் நேற்று ஞாபகார்த்த முத்திரை (01) வெளியிடும் நிகழ்வு பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு ஆன்மீக விருந்தினராக இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு கிளையின்

உப தலைவர் சுவாமி அக்ஷ்ஷரானந்தா, பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். பிள்ளைநாயகம் , சிறப்பு விருந்தினராக திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். சீறிதரன், திருக்கோணமலை மாவட்ட பிராந்திய தபால் அத்தியட்சகர் சி. அருட்செல்வம் மற்றும் முன்னாள் அதிபர்கள்,ஆசிரியர்கள்,பாடசாலை மாணவர்கள்,பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## குடிநீர் தட்டுப்பாடு; மக்கள் அசௌகரியம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட மந்துவில் மற்றும் மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களில் குடிநீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மந்துவில் மற்றும் மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளில் குடிநீர் பெற்றுக்கொள்வதில் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற கிணறுகளில் அதிகமானவை ஆழங்கூடிய கிணறுகளாகவும் கூடுதலான கிணறுகள் நீர் வற்றியும் காணப்படுகின்றன. இந்நிலையில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட கேப்பாப்புலவு பிலக் குடியிருப்பு ஆகிய பகுதிகளிலும் குடிநீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் குழாய் கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றைப் புனரமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு கூட்டுப் பொறுப்புடன் முயற்சிக்க வேண்டும்

**கோப்பாய் குறூப் நிருபர்**



இலங்கையின் விழுந்து கிடக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு மருந்து கொடுக்கும் நேரம் தாண்டிவிட்டது. எனவே கூட்டுப் பொறுப்புடனே முயற்சிக்க வேண்டும் என யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிதம்பரநாதன் உதயகுமார் தெரிவித்தார்.

கடந்த (30) திங்கட்கிழமை திருநெல்வேலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திப்பதற்கான எதிர்வு கூறல்கள் வெளியிடப்பட்டு வருகிறன.

இலங்கையில் திட்டமிடாத அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன் திட்டங்களினால் நாடு இன்று பாரிய பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியிடம் கடன் கேட்க வேண்டுமானால் பல்வேறு நிபந்தனைகள் விதித்துள்ளனர். ஆனால் சீனாவிடம் நிபந்தனை இல்லாமல் கடன்களை வேண்டியது. எனவே தற்போது நாடு பாரிய பொருளாதார அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

இலங்கை பாரிய பொருளாதார பின்னடைவை எதிர் நோக்கும் என ஏற்கனவே உலக நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் எச்சரித்திருந்தன. இச்சந்தர்ப்பத்திலேயே சர்வதேச நாணய நிதியத்திடம்சென்று இருக்க வேண்டும்.

ஆனால் எமது நாட்டின் பொரு ளாதாரம் வீழ்ச்சி க ண்டு செல்கின்ற போது மத்திய வங்கி ஆளுநர்களை மாற்றிப் பார்த்தனர். ஒன்றுமே நடைபெறவில்லை.

உதாரணமாகச் சொன்னால் நோயுள்ள ஒருவருக்கு ஆயுர்வேத சிகிச்சையை வழங்கிய பின்னர் இயலாத சமயம் பார்த்து ஆங்கில மருத்துவத்தை செய்யலாமென முயற்சிப்பதே எமது பொருளாதாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

உரிய நேரத்தில் பொருளாதாரம் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமையே நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு காரணம். இதனை எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு மேலாக நாம் அனுபவிக்க வேண்டியுள்ளது.ஆகவே நாட்டின் பொருளாதாரத்தை மேலும் கடன்களை வாங்குவதாலோ அல்லது புதிய நாணயத்தாள்களை அச்சிடுவதாலோ பிரச்சினை தீரப்போவதில்லை மேலும் அதிகரிக்கும்.

ஆகவே விழுந்து கிடக்கின்ற எமது பொருளாதாரத்தை அரசியல் சமூக மற்றும் அதிகாரிகளின் கூட்டுப்பொறுப்புணர்ந்த அர்ப்பணிப்புடனே முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.


## லுணுகலை பிரதேச சபை

2023 ஆண்டு வரவு செலவு திட்டத்தை அமைப்பதற்கு அவ்வாண்டின் மூலதன செலவின மதிப்பீட்டிற்கு மற்றும் அபிலிருத்தி திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு பொது மக்களுடைய கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

அதற்காக உங்களுடைய முன்மொழிவுகளை 2022.06.30 ஆம் திகதிக்கு முன் எமக்கு உட்படுத்துமாறு அல்லது lunugala.ps2011@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உட்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**சீ. ஜகத் சந்திர தலுக்கொட்டுவ,**
**தவிசாளர்,**
**பிரதேச சபை, லுணுகலை.**


## மகளை துன்புறுத்திய தந்தை கைது

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 5வயதுச் சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு தனது தந்தையின் தாக்குதலுக்கு இலக்காகி கை முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்த மேலும் தெரிய வருவதாவது;

சிறுமியின் தாய் வீட்டில் இல்லாத சமயம் மதுபோதையில் வந்த தந்தை தனது 5 வயதுச் சிறுமி மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடாத்தியுள்ளார்.

இதனையடுத்து சிறுமி கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழ் நாட்டு மக்களால் அனுப்பப்பட்ட

## உலர் உணவு பொருட்கள் மாந்தை மேற்கு கிராம மக்களுக்கு பகிர்ந்தளிப்பு



**(மன்னார் குறூப் நிருபர்)**

இந்தியா தமிழ் நாட்டு மக்களால் அனுப்பி வைக்கப்பட்ட அத்தியாவசிய உணவு பொருட்கள் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு மக்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (31) காலை வைபவரீதியாக வழங்கி வைக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2200 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் முதற்கட்டமாக அடம்பன் மற்றும் நெடுங்கண்டல் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 116 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.நெடுங்கண்டல் கிராம அலுவலகர் பிரிவில் வைத்து முதற்கட்டமாக பிரதேச செயலாளர் அரவிந்த ராஜ் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது உதவி பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

தொடர்ச்சியாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்காக மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்கு அதிகாலை முதல் காத்திருந்த மக்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை தொடர்ந்து எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தினமும் நீண்ட வரிசைகளில் காத்திருந்து வருகின்றனர்

இந்நிலையில் நேற்றையதினம் (01062022) கிளிநொச்சிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொள்வதற்காக நேற்று அதிகாலை முதல் வரிசையில் மக்கள் காத்திருந்த போதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படாமையால் மக்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி பொலிஸார் விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.


திகதி 31.05.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4772
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,009,410.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 1 9 6 4 7 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,512,061.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3014
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,688,680.00
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 02 23 28 40
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,107,770.56

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0081
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,460,800.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 19 33 44 62
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,646,243.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 802
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,015,940.00
வெற்றி இலக்கினம் B வெற்றி இலக்கங்கள் 07 14 19 22
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 112,496,221.20

கோடி 25 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1120
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,038,600.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 253,937,010.00
C 22 05 08 28 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01




# யாழ்.பொதுசன நூலகம் தீயூட்டப்பட்டு 41 ஆண்டு நினைவேந்தல்





**பருத்தித்துறை, யாழ்.விசேட, கோப்பாய் நிருபர்கள்**

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டு 41 ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. யாழ் மாநகர சபையின் ஏற்பாட்டில் நேற்று காலை 9.30 மணியளவில் யாழ்.பொதுசன நூலகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நினைவேந்தலின் போது யாழ்ப்பாண பொதுசன நூலகம் உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பாவுக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவேந்தலின் போது யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப்பாணப் பொதுசன நூலக பிரதம நூலகர், யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் வாசகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1ஆம் திகதி வன்முறைக் குழுவொன்றினால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97,000 அரிய நூல்கள் இருந்ததுடன், தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் திகழ்ந்தது.

# ஊடகவியலாளர் நடேசனின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்




மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட, ஊடகவியலாளரும் நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனுடைய 18ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, (31)நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு ஊடக அமையத்தில், தலைவர் சண்முகம் தவசீலனின் தலைமையில் இடம்பெற்றது. அந்தவகையில் ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் திருவுருவப்படத்துக்கு நினைவு சுடரேற்றி, மலர் வணக்கம் மற்றும், அகவணக்கம் செலுத்தப்பட்டு, உணர்வுபூர்வமாக அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அஞ்சலி நிகழ்வில் முல்லைத்தீவு ஊடக அமையத்தைச் சார்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக மற்றும், அரசியல் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உல்லாசப் பயணிகளால் குரங்கு அம்மை நோய் பரவும் சாத்தியம்

**கோப்பாய் குறூப் நிருபர்**

இலங்கைக்கு வரும் ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளால் அம்மை நோய் பரவக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் (31) செவ்வாய்க்கிழமை யாழ் போதனா வைத்தியசாலையில் போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் குரங்குகள் மற்றும் எலிகள் மூலம் பரவும் குரங்கு அம்மை நோயானது தற்போது ஆபிரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வேகமாக பரவி வருகிறது.

இவ்வாறான நிலையில் இலங்கையிலும் இந்நோய் பரவுவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் தென்படுவதால் மக்கள் அவதானமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் இருக்க வேண்டும்.

2003ஆம் ஆண்டு அமெரிக்காவில் 70 பேர் வரை இந்நோய் இனம் காணப்பட்டுள்ளது. அவ்வாறு இனங்காணப்பட்டவர்களில் விலங்குகள் கடித்தல் நகம் கீறல் அவற்றின் உமிழ்நீர் போன்றவற்றின் மூலம் இந்நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நோயானது விலங்குகளிலிருந்து மனிதனுக்கும் மனிதனிலிருந்து மனிதனுக்கும் பரவக்கூடியதாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாது நோய் உள்ளவர் பாவித்த படுக்கை விரிப்பு தலையணை போன்றவற்றின் மூலம் பரவுவதோடு குறிப்பாக ஆண் ஓரினச்சேர்க்கையாளர்களால் அதிகம் இந்நோய் பரவுகிறது.

நோயின் தாக்கமானது தொடர்ச்சியான காய்ச்சல், பெரிதான கட்டிகள் வீக்கத்தை கொண்டிருப்பதோடு வாயில் கொப்புளங்கள் ஏற்படுவதோடு நீர் இழப்பும் ஏற்படும்.

# பாரம்பரிய நாட்டுக்கூத்து

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசி விசாக பொங்கலை முன்னிட்டு ஆண்டுந்தோறும் நடத்திவரும் கேவலன் கண்ணகி வரலாற்றினை சொல்லும் நாட்டுக்கூத்து இந்த ஆண்டும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகள் இன்று (02.06.2022) இரவு 7.00 மணிக்கு முள்ளிவயை காட்டுவிநாயகர் ஆலய முன்றலில் சிறப்பாக நடைபெறவுள்ளதாக காட்டு விநாயகர் நாடக மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

# கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு வடமாகாண சபையினால் சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் எந்த பயன்பாடும் இன்றி சமூக விரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இயற்கை அழகு நிறைந்தும் சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய வகையில் அமைந்துள்ள வன்னேரிக்குளம் பகுதியில் வடமாகாண சபையினால் சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் எந்தவித பயன்பாடுகளுமின்றி பல ஆண்டுகளாக காணப்படுகின்றது.



அதாவது அப்பிரதேசத்தில் வடமாகாண முதலமைச்சரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் ஆறு மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு அப்போதைய வடமாகாண சபையின் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனினால் மக்கள் பாவனைக்காக சம்பிரதாயபூர்வமாக கையளிக்கப்பட்டது. ஆனால் இந்த சுற்றுலா மையம் கையளிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரைக்கும் எந்தவிதமான பயன்பாடுகளும் இன்றி காணப்படுவதுடன் அதன் கட்டடங்களும் தற்போது சேதமடைந்துள்ளன. அத்துடன் சட்டவிரோத செயற்பாடுளின் கூடாரமாகவும் மாறியுள்ளதாக பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இதனைப் பேணி பாதுகாத்து பராமரிக்க வேண்டிய பிரதேசசபை இதுதொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையெனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதுதொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு பலதடவை கொண்டு செல்லப்பட்ட போதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.



# உலர் உணவுப் பொதிகளை வழங்கிவிட்டு கச்சதீவை மீட்க நடவடிக்கை

## தமிழகம் எமது தொப்புள்கொடி உறவா? ம.வி.முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் கேள்வி

**கோப்பாய் குறூப் நிருபர்**

தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் பொருளாதார நெருக்கடியில் வாழும் இலங்கை மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவிட்டு கச்சதீவை மீட்பதற்கு இதுவே தருணம் எனக் கூறியிருப்பது தமிழகம் எமது தொப்புள் கொடி உறவா? என்ற கேள்வி எழுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

அலிபாவா திருடர்கள் கதை பற்றி அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

நமது நாட்டின் பொருளாதார பிரச்சினையை சாதகமாக பயன்படுத்தி இந்தியா தனது ஆதிக்கத்தை இலங்கையில் மேற்கொண்டு வருகின்றமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளங்களை இந்தியாவும் சீனாவும் போட்டி போட்டு பெற்றுக் கொள்ளும் நிலையில் இலங்கையின் அரிதான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் இருநாடுகளின் வசம் சென்றுள்ளன.

சீனாவிடம் நுரைச்சோலை கையளித்தபோது இந்தியாவிடம் சம்பூர் அனல் மின் நிலையத்தை கையளித்தனர்.

கொழும்பு போர்ட் சிட்டி துறைமுகத்தை சீனாவிடம் கையளித்த போது திருகோணமலை துறைமுகம் அதனை சூழவுள்ள பகுதிகளை இந்தியாவுக்கு தாரை வார்த்தார்கள்.

அதிவேக நெடுஞ்சாலையை சீனாவுக்கு தாரை வார்த்த போது யாழ் தேவி புகையிரதப் பாதையை இந்தியாவுக்கு வழங்கினர். இவ்வாறு இந்தியாவும் சீனாவும் இலங்கையின் வளங்களையும் வருமான மார்க்கங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன.

ஆகவே இலங்கைக்கு நிவாரண



பொருட்களை வழங்குவதற்கு இந்தியா 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் போன்ற நிபந்தனைகளை விதித்திருந்தால் உண்மையில் அவர்கள் தொப்புள் கொடி உறவுகள் தான் ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை என்றார்.

# வடமாகாணத்தில் இதுவரை 132 வைத்திய அதிகாரிகள் கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்

**யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்**

வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் 132 வைத்திய அதிகாரிகளே இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகளின் நியமனம் தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், மத்திய சுகாதார அமைச்சினால் உள்ளக பயிற்சியை நிறைவு செய்த வைத்திய அதிகாரிகளுக்கு கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்திற்கு 138 வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 132 வைத்திய அதிகாரிகள் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதில் யாழ் மாவட்டத்திற்கு 23 வைத்திய அதிகாரிகளும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும் வவுனியா மாவட்டத்திற்கு 22 வைத்திய அதிகாரிகளும் மன்னார் மாவட்டத்திற்கு 35 வைத்திய அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 31 வைத்திய அதிகாரிகளும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதாக தெரியவருகின்றது.

# கிழக்கின் குரல்



## 21ஆவது திருத்தம், ஜனாதிபதி முறை ஒழிப்பு:

# முஸ்லிம் தரப்புகள் ஒன்றிணைந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்

## கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி

*சாய்ந்தமருது விசேட நிருபர்*

அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டம் மற்றும் ஜனாதிபதி முறை ஒழிப்பு போன்ற விடயங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புத்திஜீவிகள் உட்பட அனைத்து முஸ்லிம் தரப்புகளும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுக்க முன்வர வேண்டும் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் நேற்று (01) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் கட்டமைப்பிலுள்ள குறைபாடுகளும் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 20 ஐ ஒழித்து 19 ஐ மையப்படுத்தி 21 ஐ கொண்டு வருவது பற்றி அரசாங்க மட்டத்தில் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விடயங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் எதுவும் இதுவரை ஆக்கபூர்வமான கருத்துக்களை வெளியிட்டதாக தெரியவில்லை. இவர்கள் தாம் சார்ந்திருக்கின்ற அரசியல் கூட்டணிகளின் தீர்மானங்களுடன் ஒத்துப்போகின்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றனர். குறிப்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமைகள், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்தின் பின்னால் செல்வதற்கும் தேசிய காங்கிரஸ் தலைமையானது உதய கம்மன்பில, விமல் வீரவன்ச தலைமையிலான கூட்டணியின் முடிவுக்கேற்ப செயற்படவும் தயாராக இருக்கின்றனர்.

நாட்டினதும் சமூகத்தினதும் நலன் கருதிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும் என்ற அழைப்பை கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி விடுக்கிறது என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

# நிதிச் செலவுகளை உடனடியாக குறைக்க கிழக்கு சுகாதார செயலாளர் அறிவுரை

*நிந்தவூர் குறூப் நிருபர்*

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமை, இயல்பு நிலைக்கு திரும்பும் வரை, கிழக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் நிதிச் செலவினங்களை உடனடியாக குறைக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தனது அமைச்சின் கீழுள்ள சகல மாகாண திணைக்கள தலைவர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

தனது அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து திணைக்கள தலைவர்களுடனான தொழில்நுட்ப கலந்துரையாடல் (31) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம்பெற்றபோதே



அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கி வைத்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியிலுள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண மக்களும் அதே நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான நிலையில், அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை மிகச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்ற ஆலோசனையையும் அவர் வழங்கியுள்ளார்.

தங்களது திணைக்களத்திலும், திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்களிலும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல், அத்தியாவசிய மற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசியமற்ற திட்டங்கள் மற்றும் கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.



அல்ஜெஸீரா பெண்கள் அரபுக்கல்லூரிக்கு அல்ஹித்மத்துல் உம்மா பௌண்டேசனினால் திங்கட்கிழமை மாலை கிண்ணியா முனைச்சேனையில் அமைந்துள்ள அல்ஜெஸீரா அரபுக்கல்லூரி வளாகத்தில் வைத்து ஜெனரேட்டர் அன்பளிப்பு செய்யப்பட்டபோது,....
படம் கிண்ணியா தினகரன் நிருபர்

# சாய்ந்தமருதில் 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை

*கல்முனை விசேட நிருபர்*

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நேற்று (01) ஆரம்பமானது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ். றிபாயா உட்பட கிராம சேவகர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு 03 மாத காலத்திற்கு மாதாந்தம் 5,000 ரூபா நிவாரண கொடுப்பனவை வழங்கும் விசேட திட்டத்தின் கீழ் 4,025 குடும்பங்கள் இக்கொடுப்பனவை பெறத்தகுதி பெற்றிருப்பதாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தெரிவித்தார்.

# மட்டுவில் சிகரட் விற்பனை நிலையங்கள் சுற்றிவளைப்பு



*மட்டக்களப்பு குறூப் நிருபர்*

சிகரட் பாவனையை மக்கள் மத்தியில் இல்லாதொழிக்கும் நோக்கில் மட்டக்களப்பு நகரில் சிகரட் விற்பனை நிலையங்கள் நேற்றுக் காலை சுற்றிவளைக்கப்பட்டன.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் சுமார் 15 கடைகள் சுற்றிவளைக்கப்பட்டு சிகரட் தேடுதல்கள் நடாத்தப்பட்டதாக கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதாகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தேனீர்ச்சாலை உட்பட நகரிலுள்ள பிரபல வர்த்தக நிலையயங்களும் சோதனையிடப்பட்டன.

சிகரட் கண்டுபிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டதுடன் சிகரட் விற்பனை செய்யாத கடைகளுக்கு நற்சான்றிதழ் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய் விடுதிக்கு முன்னாலுள்ள ஹோட்டலிருந்து பெருமளவான சிகரட்கள் கைப்பற்றாப்பட்டப்பட்டதுடன் குறித்த வர்த்தகருக்கு விழிப்பூட்டல் செய்யப்பட்டதுடன் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

## பொருளாதார பிரச்சினைக்கு நாமும் பங்களிப்போம்;

# முன்னுதாரணமாக செயற்பட்ட மட்டு மாவட்ட செயலகம்



*கல்லடி குறூப் நிருபர்*

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக எரிபொருளை மீதப்படுத்தும் நோக்கில் நேற்று முதல் (01) புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் மாவட்ட செயலகத்திற்கு பொது போக்குவரத்து மற்றும் துவிச்சக்கர வண்டி மூலமாக அலுவலகத்திற்கு சமுகமளித்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் அனைத்துப் பொருட்களினதும் விலைகள் அதிகரித்துள்ளன. எரிபொருள் விலை உச்சத்தைத் தொட்டுவிட்டது. அத்தியாவசியப் பொருட்களைக் கூட இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லாமல் நாட்டின் கடன் சுமை அதிகரித்துவிட்டது. இந்நிலைமைகளுக்கு மத்தியில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் எரிபொருளை மீதப்படுத்தி நாட்டிற்கு நம்மாலான பொருளாதார பங்களிப்பை வழங்க வேண்டியதன் அடிப்படையில் ஊழியர்கள் செயற்பட்டுள்ளனர்.

# கல்முனையில் காணாமல் போன சிறுமி வாழைச்சேனையில் கண்டுபிடிப்பு

*பெரியநீலாவணை விசேட நிருபர்*

கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமாபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்கியிருந்த நிலையில் காணாமல் போன 15 வயது சிறுமி (30) மாலை வாழைச்சேனை, கல்குடா வீதியில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு முன்பாக வீதியில் நின்ற நிலையில் கல்முனை பொலிஸார் கண்டுபிடித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த 29ம் திகதி மதியம் 2.30 மணியளவில் குறித்த சிறுமி கல்முனை சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்கியிருந்த நிலையில் காணாமல் போனதாக குறித்த பாடசாலையின் நிர்வாகத்தினர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் அன்றையதினம் மாலை முறைப்பாடு செய்தனர்

இதனையடுத்து காணாமல் போன 15 வயது சிறுமியை கண்டுபிடிப்பதற்காக கல்முனை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். இன் நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சின் பக்கீரின் வழிகாட்டலுக்கு அமைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.றபீக் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஜகீர்த்தன் மற்றும் பெண் பொலிஸ் உள்ளிட்ட குழுவினர் சிறுமியின் நண்பி ஒருவரின் துணையோடு வாழைச்சேனை பகுதிக்கு சென்று காணாமல் போன சிறுமியை 24 மணி நேரத்துக்குள் கண்டுபிடித்து மீட்க முடிந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் பாதுகாப்பிற்காக குறித்த பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த நிந்தவூர் 2 இமாம் கஸ்ஸாலி வீதியை சேர்ந்த 15 வயது வதுர்தீன் பாத்திமா சஜித்தா என்ற சிறுமியே இவ்வாறு காணாமல் போய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.தற்போது மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மட்டக்களப்பு பயனியர் வீதியில் சமையல் எரிவாயு கிடைக்கும் வரையில் நகர மறுக்கும் மக்கள்



*மட்டக்களப்பு விசேட நிருபர்*

மட்டக்களப்பு பயனியர் வீதியின் அருகில் உள்ள ஆலமர நிழலில் (31) முதல் வரிசையில் சமையல் எரிவாயுவைப் பெறுவதற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர்.

குறித்த இடத்திற்கு நேற்று (01) விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் ஜனா கருணாகரன்,மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகர சபையின் உறுப்பினர்கள் விஜயம் செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் குறித்த பிரச்சினையை விளக்கினார். மட்டக்களப்பு பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி கே. ஹெட்டியாராச்சியும் வருகைதந்து எரிவாயு தற்போது வழங்க முடியாது என்றும் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டபோதும் வரிசையில் நின்றவர்கள் எரிவாயு வழங்கப்படுவதற்கான டோக்கனை வழங்குமாறு கோரி அடம்பிடித்தனர்.

தொடர்ந்து எரிவாயு கிடைக்கும் வரை நாங்கள் குறித்த இடத்திலிருந்து அகல மாட்டோம் என அடம்பிடித்து வரிசையில் நின்றனர்.

# திருமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நியமனம்

*தம்பலகாமம் குறூப் நிருபர்*



திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக (காணி) நியமிக்கப்பட்ட எஸ். சுதாகரன் தம் கடமைகளை நேற்று (01) மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றார்.

2007 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இலங்கை நிருவாக சேவை திறந்த போட்டிப்பரீட்சை மூலம் இலங்கை நிருவாக சேவைக்கு இவர் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கை நிருவாக சேவை முதலாம் வகுப்பு அதிகாரியான இவர் இதற்கு முன்னர் வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களின் உதவி தேர்தல்கள் ஆணையாளர், திருகோணமலை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண பிரதி தேர்தல்கள் ஆணையாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச். என்.ஜயவிகரம,மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் உட்பட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் பொருட்கள் இன்றி சதொச விற்பனை நிலையங்கள்

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு உட்பட கிழக்கு மாகாணத்திலுள்ள சதொச விற்பனை நிலையங்கள் பொருட்கள் இன்றி வெறிச்சோடிக் கிடக்கின்றன இதனால் அந்நிலையத்தை நாடி பொருள்கள் வாங்க வரும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதைக் காண முடிகின்றது.

சதொச விற்பனை நிலையங்களில் கடந்த சில நாட்களாக கையிருப்பில் உள்ள பொருள்கள் விற்றுத் தீர்ந்து கொண்டிருந்த நிலையில் இப்பொழுது



பல சதொச விற்பனை நிலையங்கள் பொருட்கள் இல்லாது வெறிச்சோடிக் காணப்படுகின்றன.தங்களுக்கு சதொச தலைமைக் களஞ்சியசாலைகளிலிருந்து நீண்ட நாட்களாக பொருள்கள் வந்து சேரவில்லை என சதொச விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவிக்கின்னறர். ஏற்கெனவே சதொச விற்பனை நியைலங்களில் சீனி மற்றும் அரிசியை தனியே வாங்க முடியாத கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. அதனால் அத்தியாவசியமாக தமக்கு சீனியையும் அரிசியையும் வாங்க வரும் மக்கள் அரிசிக்கும் சீனிக்குமாகச் சேர்த்து தமக்கு அத்தியாவசியமில்லாத பொருள்களையும் வாங்க வேண்டி வந்ததால் சதொசவில் இருந்த ஏனைய பொருட்களும் விற்றுத் தீர்ந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.




# இராகலை பிரதேச தோட்ட வைத்தியசாலைகளின் பணிகள் குறைவடைந்து, மூடப்படும் நிலை

நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேச சபைக்கு உட்பட்ட இராகலை பிரதேச தோட்டப்பகுதிகளில் இயங்கி வந்த தோட்ட வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் குறைந்து வருவதுடன் சில தோட்டப்பகுதிகளில் வைத்திய சேவைகள் நிறுத்தப்பட்டும் வருகிறது.

இது திட்டமிட்ட செயல் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளதாக வலப்பனை பிரதேச சபையின் தேசிய தொழிலாளர் முன்னணி உறுப்பினர் பெருமாள் சண்முகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த சில மாதங்களாக இராகலை பிரதேசத்தில் தோட்டங்களில் முறையாக முன்னெடுக்கப்பட்டு வந்த தோட்ட வைத்தியசாலைகளின் வைத்திய சேவை செயற்பாடுகள் குறைந்தும் பின் முற்றாக நிறுத்தப்பட்டும் வருகிறது. இதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட வைத்தியசாலைகள் ஊடாக பெற்றுக்கொள்ள கூடிய வைத்திய சேவைகள் உள்ளிட்ட பிறப்பு,இறப்பு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.



அதனடிப்படையில் இராகலை மத்திய பிரிவு தோட்டம், சென் லெனாட்ஸ் தோட்டம்,லிடேஸ்டல் தோட்டம்,டெல்மார் தோட்டம் மற்றும் ஹைபொரஸ்ட் தோட்ட மக்கள் தோட்ட வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்வதில் நாள்தோரும் பிரச்சினைகளை அனுபவிக்கின்றனர்.

அத்தோடு இராகலை நடுக்கணக்கு தோட்டத்தில் புனரமைக்கப்பட்டுள்ள மகப்பேற்று வைத்தியசாலை கட்டடத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிகிச்சை அளிப்பதும் நிறுத்தப்பட்டுள்ளது.

மாறாக மாதாந்த பரிசோதனைகள் மாத்திரம் இடம்பெறுவதுடன் இக்கட்டடத்தின் பிள்ளை பேறு அறைகள் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகஸ்தர் காரியாலயங்களாக மாறியுள்ளன.

இதனால் தோட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்கள் பாரிய அளவில் போக்குவரத்துக்கு, பண விரயம் செய்து மாவட்ட மற்றும் பிரதேச வைத்தியசாலை நாடியே தமது வைத்திய சேவையை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கவனம் எடுக்குமாறும் கோட்டு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஆ.ரமேஸ்**



நோர்வூட் பகுதியில் சாரதிகள் டீசலுக்காக நான்கு நாட்கள் வரிசையில் காத்திருப்பதை காணலாம்.
படம் ஹற்றன் விசேட நிருபர்

# மாத்தளை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கு சேதனப் பசளை விநியோகம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்குத் தேவையான சேதனப் பசளை விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய உரக்கூட்டுத் தாபனத்தின் மாத்தளை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.எம் விஜயகோன் தெரிவித்தார்

அரசாங்கத்தினால் தற்போது நெற்செய்கைக்கு வழங்கப்படும் சேதனப் பசளை மற்றும் திரவ உர வகைகளை இவ்வாறு இலவசமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இம் மாவட்டத்தில் இம்முறை சிறுபோகத்தில் 17,458 நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைய 8,729 மெட்ரிக் தொன் சேதனப் பசளை மற்றும் 2,33,825 லீட்டர் திரவ உரவகைகளை மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கறுப்பு சந்தை, வரிசை முறையை தவிர்க்க எரிவாயு விநியோகத்தில் புதிய வழிகள்

**ஹற்றன் விசேட நிருபர்**

ஹற்றன் நகரில் கறுப்பு எரிவாயு சந்தை மற்றும் வரிசை முறையைத் தவிர்க்கவே சமையல் எரிவாயு விநியோகத்துக்கான பதிவு செய்யும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது என அம்பகமுவ பிரதேச செயலாளர் சித்தாரா கமகே தெரிவித்தார்.

இந்த புதிய பதிவு நடைமுறையை (30) ஹற்றன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

முறையாக ஒவ்வொரு குடும்பத்தினரும் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள கூடியவாறு முன்கூட்டியே பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கமைய அடுத்த மாதத்திற்கு தேவையான எரிவாயுவை பாவனையாளர் ஒருவர் பதிவு செய்து கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

அவருடைய பதிவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவர் ஏப்ரல் மாத மின்சார பட்டியலினை எடுத்து வர வேண்டும். அவ்வாறு பதிவு செய்தவர்களுக்கு தொலைபேசி ஊடாகவோ, குறுஞ்செய்தி ஊடாகவோ அறிவிக்கப்படும். அதனை தொடர்ந்து, அவர் எரிவாயு வரிசையில் நிற்காது தங்களது குடும்பத்திற்கு தேவையான எரிவாயுவைப் பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

இதன் மூலம் அனைவருக்கும் எரிவாயு பெற்றுக்கொள்ள கூடிய நிலைமை உருவாவதுடன் மேலதிகமாக எரிவாயுக்களை சேமித்து வைத்துக்கொள்ளவும் முடியும் என்றார்.

# இந்திய உதவி விடயத்தில் மலையக மக்களுக்கு பாராபட்சம் காட்டப்படக் கூடாது

**அக்குறணை குறூப் நிருபர்**

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கும் போது கடந்த காலங்களைப் போன்று மலையக மக்களுக்கு பாராபட்சம் காட்டப்படக் கூடாது என்று கண்டி மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மலையக அரசியல் வாதிகள் மத்தியில் மேற்படி விடயம் தொடர்பாக கூட்டு வேலைத்திட்டம் ஒன்று தேவை? இல்லாத விடத்து கடந்த காலங்கள் போன்று அவை சிதறடிக்கப்படலாம். தற்பேதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு உதவி செய்ய முறையான பொருளாதார வேலைத்திட்டம் ஒன்று தேவை.



சரியான பொருளாதாரத் திட்டம் இல்லை என்றால் அத்தியாவசியப் பண்டங்களுக்கான வரிசைகள் தீரப்போவதில்லை.

தமிழ் நாடு அரசு வழங்கிய 2 பில்லியன் உதவிக்கான பொருளாதார வேலைத்திட்டம் என்ன?இந்திய உதவி முறையாகப் பகிரப்பட வேண்டும். கொவிட் கால உதவி போல் முறையற்ற வகையில் பகிரப்படக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம்.

உலக வங்கி இலங்கைக்கு நிதி உதவி செய்ய ஏன் மறுக்கிறது, அப்படியாயின் இலங்கையில் முறையான பொருளாதார திட்டம் மற்றும் கொள்கை ஒன்று இல்லயையா? எனக் கேள்வி எழுப்பினார்.

# கூப்பன் பெற்றும் சமையல் எரிவாயு கிடைக்கவில்லை

சமையல் எரிவாயு வரிசையை தவிர்க்கவும் எரிவாயு விநியோகத்தில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கவும் ஹற்றன் டிக்கோயா நகர சபை எல்லைக்குட்பட்ட நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிப்பவர்களுக்கு கூப்பன் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்றது. இந்தநிலையில் நேற்று (1) ஹற்றனில் சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டது. இதன்போது கொட்டும் மழையிலும் தமக்கான எரிவாயுவை பெற்றுக் கொள்ள கூப்பன்களுடன் வருகை தந்தவர்களுள் பலருக்கு எரிவாயு கிடைக்கவில்லை. எரிவாயு கிடைக்காதவர்கள் தமது கைப்பேசிக்கு அம்பகமுவை செயலகத்தில் இருந்து அழைப்புகள் கிடைக்கவில்லை. அதனால் தகமக்கான எரிவாயு கிடைக்கவில்லை என தெரிவித்த அதேவேளை, மேலும் சிலரோ தாம் பிரதேச செயலகத்தின் அழைப்புகளை தவற விட்டுள்ளதாகவும் அதனால் தமக்கு எரிவாயு இல்லை என்று விநியோக நிலையத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

# பலாங்கொடை பகுதியில் எலிக்காய்ச்சல், டெங்கு பரவும் அபாயம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பகுதியில் சீரற்ற காலநிலை நிலவுவதால் எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இது விடயமாக பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டுமெ‌ன பலாங்கொடை இம்புள்பே சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

பிரதேசத்தில் வயல் நிலங்களில் பணிபுரிவோர், இரத்தினக்கல் அகழ்வு வேலைகளில் ஈடுபடுவோர், சாக்கடைகள் சுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் சேற்று நிலங்களில் விவசாயம் செய்யும் பொதுமக்கள் எலிக்காய்ச்சல் நோய் பரவும் அபாயம் உள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வயல் நிலங்களில் மற்றும் ஏனைய சேற்று நிலங்களில் வேலை செய்யும் பொது மக்கள் அந்த வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் எலிக்காய்ச்சல் பாதுகாப்பிற்கு தேவைப்படும் மருந்துகளை எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டினர். அரசாங்க வைத்தியசாலைகளில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் ஊடாக பொது சுகாதார பரிசோதனை அதிகாரிகளின் மூலம் இந்த மருந்தினை பெற்றுக் கொள்ள முடியும். காய்ச்சல் மற்றும் உடம்பு வலி காய்ச்சல் தலைவலி, வாந்தி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரச வைத்தியரை நாடாவும். அத்தோடு சீரற்ற காலநிலை காரணமாக வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் நீர் தேங்கும் இடங்களில் டெங்கு நுளம்புகள் பரவ வாய்ப்புள்ளதால் வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ள பழகிக் கொள்ளவும்.

# குளங்கள் – நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்வால் கிராமங்களுக்கு வரும் காட்டு யானைகள்

**தம்புள்ள தினகரன் நிருபர்**

அதிக மழை வீழ்ச்சி காரணமாக மாத்தளை மாவட்டம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள நீர்த் தேக்கங்கள் மற்றும் குளங்கள் என்பவற்றின் நீர் மட்டம் அதிகரித்து வருவதன் காரணமாக காட்டு யானைகள் அதன் சரணாலயங்களை இழந்து வருகின்றன. இந் நிலையில் அவ் யானைகள் மாத்தளை மாவட்டத்தினுள் பிரவேசிக்கும் சாத்தியம் அதிகரித்து வருவதாக மாத்தளை, ரஜம்மன வனஜீவி அலுவலகத்தின் வனப்பாதுகாப்பு அதிகாரி எம்.பீ.விஜேக்கோன் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள மொறகஹகந்த மற்றும் இம்மாவட்டத்தை அண்மித்துள்ள கிரித்தலை குளம், கவுடுள்ள நீர்த் தேக்கம் உள்ளிட்ட நீர்ப் பாசன கட்டமைப்பினுள் நீர் மட்டம் வேகமாக உயர்வடைந்து வருவதாகவும் இதனால் காட்டு யானைகளின் வாழிடங்களும் அவற்றின் போக்குவரத்துப் பாதைகளும் துரிதமாக அழிவடைதல் போன்றவை காரணமாக இந்நிலை உருவாகியிருப்பதாகவும் காட்டு யானைகள் அவற்றிற்கான உணவைப் பெற்றுக் கொள்ளும் புற்றரைகள் உள்ளிட்ட வயல்வெளிகள் என்பன இழக்கப்படுவதால் இவ்வாறு அவை கிராமங்களுக்குள் ஊடுருவும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுவதாகவும் விஜேக்கோன் தெரிவித்தார்.

# மத்திய மாகாணத்தில் 100,000 வீட்டுத்தோட்டங்கள் ஆரம்பம்

**அக்குறணை குறூப் நிருபர்**

மத்திய மாகாணத்தில் 100,000 வீட்டுத்தோட்டங்களை பயிரிடும் வேலைத்திட்டம் மாகாண விவசாய அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

மாகாண உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான மத்திய மாகாண ஆளுநர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே ஆளுநர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் மத்திய மாகாணத்தில் உணவு பாதுகாப்பை உருவாக்கும் நோக்கில் இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்



இதற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மாகாணத்தில் நடத்துவதற்கு மாகாணக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது,

மூன்று மாவட்டங்களுக்கும் மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் மற்றும் மூன்று மாவட்டக் குழுக்களும் அமைக்கப்பட வேண்டும் என அங்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் வகையில் பிரதேச செயலாளர்கள் தலைமையில் குழுக்களையும், கிராம உத்தியோகத்தர்கள் தலைமையில் கிராமிய குழுக்களையும் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# தோட்டத்திலுள்ள தரிசு நிலங்களை தொழிலாளர்களுக்கு வழங்கவும்

## கடிதம் மூலம் இராமநாதன் அமைச்சருக்கு தெரிவிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**

தோட்டங்களில் பயிரிடப்படாதுள்ள காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கும் அவர்களின் குடும்பத்திலுள்ள வேளையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுத்து உதவினால் அவர்கள் அக்காணிகளில் தங்களுக்குத் தேவையான உணவு பயிர்களை உற்பத்தி செய்து தமது வாழ்வாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என பெரும் தோட்டத் தொழிற் சங்க செயலாளர் நாயகமும் லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளருமான எஸ். இராமநாதன் தோட்டத் தொழிற்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,...

இன்று மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்க முடியாதுள்ளது. இவற்றை வாங்க செல்லும் போது கடைகளில் பொருட்கள் இல்லை. அப்படியே பொருட்கள் இருந்தாலும் அதற்கு இரண்டு மூன்று மடங்கு அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டிய நிலை.

அத்தோடு இன்னும் சில மாதங்களில் உணவு பொருட்கள் அறவே இல்லாமல் போகக் கூடிய நிலை தோன்றியுள்ளது.உணவு பஞ்சமும் உருவாகலாம். நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமாக

மாறியுள்ளதால் பலர் இதனால் பெரிதும் பாதிக்ககூடிய நிலையும் உறுவாகியுள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு தோட்டங்களில் பயிரிடப்படாதுள்ள காணிகளை தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களுக்கும் தோட்டங்களில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கொடுத்து உதவினால் அவர்கள் அக்காணிகளில் தமக்குத் தேவையான உணவு வகைகளை பயிரிட்டு ஓரளவாவது சமாளித்துக் கொள்வார்கள்.இதற்கு தேவையான ஆலோசனைகளையும் மானிய வசதிகளையும் செய்து தர வேண்டிய பொறுப்பு தோட்ட நிர்வாகத்திடமுள்ளது இதனை நாம் எதிர் பார்த்துள்ளோம் எனவும் இராமநாதன் கோரியுள்ளார்.




கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தினம் கடந்த சனிக்கிழமை மாலை சிரேஷ்ட சட்டத்தரணியும், தமிழ் சங்கத்தின் துணைத் தலைவருமான திருமதி ஜெயந்தி விநோதன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.



தமிழ் நாட்டிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற உலர் உணவுப் பொதிகள் தம்பலகாமம் பிரதேச செயலப் பகுதியிலும் நேற்று (01) வழங்கி வைக்கப்பட்டன. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: தம்பலகாமம் குறூப் நிருபர்)



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தும்புலுவாவ கிளையின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு தும்புலுவாவ ரியோ ரிசப்சன் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம் ரிஸ்மி 20 ஆவது தடவையாக இரத்ததானம் வழங்கி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த போது...

# குடும்ப பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த தையல் மெசின்கள்

**மாவத்தகம தினகரன் நிருபர்**

பெண்களது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பெண்களிடையே சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் வை. டப்ளியூ. எம். ஏ இன் ஏற்பாட்டில் தையல் மெசின்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் கேட்போர் கூடத்தில் வை. டப்ளியூ. எம். ஏ இன் தலைவி பவாஸா தஹா த்லைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாகிஸ்தான் நாட்டு உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கி மற்றும் கௌரவ அதிதியாக அகில இலங்கை வை.எம்.எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.




இதன் போது வை. டப்ளியூ.எம். ஏ இன் உதவி ஆலோசகர் தேசமானிய மர்ளிய சித்தீக், அதன் பிரதிநிதிகள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். கொழும்பு, கண்டி, கந்தளாய், ஏறாவூர், கல்முனை உள்ளிட்ட இனங்காணப்பட்ட குடும்பப் பெண்களுக்கு இந்த தையல் மெசின்கள் வழங்கி வைக்கப்பட்டன.





வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சபரிகிரீசன் ஐயப்ப சுவாமி தேவஸ்தானத்தில் 18ம் படி பிரதிஷ்டா பூஜை, ஆலய புனருத்தான திருப்பணி அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. சர்வபோதகாச்சார்யார் பிரம்மஸ்ரீ விஸ்வ நாராயணன் குருக்கள் பூஜை வழிபாடுகளை நடாத்தினார். ஆலயத் தலைவர் ஆர்.ஜெயகுமார், செயலாளர் பி.ஜெயசுந்தரன், சிவனேச சர்மா குருக்கள் ஆகியோரைக் காணலாம். (படங்கள்: கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

# நாச்சியாதீவில் சிறுபோக வேளாண்மை ஆரம்பம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின் நாச்சியாதீவு விவசாயப் பகுதியில் இம்முறை சிறு போக வேளாண்மைச் செய்கைக்காக ஆரம்ப கட்ட விவசாய நடவடிக்கைகளில் விவசாயிகள் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றனர்.

போதியளவு பசளைகள் கிடைக்காத பட்சத்தில் நெல் வேளாண்மைக்கு பதிலாக உப உணவுப் பயிர்ச் செய்கையை மேற் கொள்ள விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.இது தவிர ஏற்படப் போவதாகக் கூறப்படும் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வாக வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு பலர் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், இருக்கும் தோட்டக் காணியில் புதிய முறையிலான மரக்கறி வகைகளை பயிரிடவும் தீர்மானித்துள்ளனர்.

நவீன முறையிலான வீட்டுத் தோட்ட மரக்கறி உற்பத்தி முறை பற்றி பலரால் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதோடு, இதன் மூலம் குறுகிய காலத்தில் அதிகரித்த மரக்கறி உற்பத்தியை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# விவசாய காணி பயன்பாடு பற்றி ஆராயும் குழுக்கூட்டம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் பாவனையில் உள்ள விவாசாயக் காணிகள் பற்றி ஆராயும் கூட்டம் ஒன்று அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குழுவின் அனைத்துத் தரப்பினரதும் விருப்பத்துடன், அனைவருடனும் இணைந்து செயற்படுவதன் ஊடாக ஏற்படும் காணி பிரச்சினைகளை குறைத்து உரிய விவசாய நடவடிக்கைகளை இலகுவாக நிறைவேற்ற முடியும் என இதன்போது குறிப்பிட்டார்.

அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட குடா மணிங்கமுவ, சியம்பலாவ, ஆகிய பிரதேசத்தில் உள்ள சுமார் 21 ஏக்கர் விவசாய காணியை நீண்டகால குத்தகைக்கு வழங்குவது பற்றிய கோரிக்கை விடுப்பது தொடர்பில் குழுக் கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு உள்ள கிணறுகளில் விலங்குகள் விழுவதை தடுக்க வேலி அமைத்து, மின் வேலி அமைக்க வேண்டும். வனவிலங்கு பாதுகாப்பு துறையுடன் ஆலோசித்து இது மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், வரண்ட காலங்களில் சரியான நீர் முகாமைத்துவ முறையை பின்பற்றுவதை விவசாயிகள் உறுதி செய்ய வேண்டியதும், காணி வழங்கப்பட்ட நோக்கத்திற்கு எதிராக யாராவது செயற்பட்டால் அது மீளப் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் இதன் போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

# நூற்றாண்டில் தடம் பதித்த கண்டி மோபிறே கல்லூரி








கண்டி மோபிறே கல்லூரி (17) ஆம் திகதி தனது நூறாவது அகவையில் தடம் பதித்துள்ளது.

கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையான மோபிறே கல்லூரி 1911 இல் தென் ஆபிரிக்காவிலிருந்து வந்த இரு பெண்மணிகளால் கால்கோளிடப்பட்டது.

1922 மே மாதம் 17ஆம் திகதி கல்லூரி என்ற அந்தஸ்தைப் பெற்றது. அதிபர்கள் பலரின் அயரா முயற்சியினால் பல்வேறு சவால்களையும் கடந்து இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

தற்போதைய அதிபர் திருமதி மனோரஞ்சனி கிங்ஸ்லி கல்லூரி ஆலோசனை நிர்வாக சபை குழுவினருடனும் ஆசிரிய குழாத்தினருடனும் இணைந்து நூற்றாண்டு விழாவிற்கான பல்வேறு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டிருந்தார். எனினும் நாட்டின் நிகழ்கால சூழ்நிலை காரணமாக அனைத்துத் திட்டங்களையும் செயற்படுத்த முடியவில்லை. நன்றி நவிலும் ஆராதனைகளுடனான வைபவங்கள் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக குருநாகலை மறை மாவட்ட வந்தனைக்குரிய குருமுதல்வர், கல்லூரி முகாமையாளர், அதிபர் உட்பட கௌரவ விருந்தினர்கள் கல்லூரி பாண்ட்வாத்தியக்கு ழுவினரால் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து குருமுதல்வரால் தேசியக் கொடியும் கல்லூரி முகாமையாளர் அருட் பணியாளர் பாக்கியராஜ் ஐயாதுரை மிசனரி கொடியும் பாடசாலை அதிபர் திருமதி மனோரஞ்சனி கிங்ஸ்லி கல்லூரி கொடியும் ஏற்றிய பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்நிகழ்வுகள் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெற்றன. மங்கள விளக்கேற்றலுடன் நன்றி நவிலலும் ஆராதனை வைபவங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வரவேற்புக்கான திருவிவிலியம் வாசிக்கப்பட்டதன் பின்னர் கர்நாடக சங்கீத மாணவியரின் பிராத்தனைப் பாடலுடனான வரவேற்பு நடனம் அரங்கேறியது.

அதிபர் திருமதி மனோ கிங்ஸ்லியினால் மோபிறே வரலாறு தொடர்பான சிறப்புரையாற்றப்பட்டது. பாடகர் குழுவினரால் நிகழ்ச்சிகளுக்கேற்ற விதமான கீர்த்தனைகள் இசைக்கப்பட்டன. காணிக்கைப் பாடலுடன் கண்டிய நடனமும் இடம்பெற்றது.

நூற்றாண்டு விழாவிற்கான கேக்கினை ஆரம்ப பிரிவு மாணவியுடன் இணைந்து அதிபர் வெட்டினார். அன்றைய முக்கிய நிகழ்வாக மோபிறே கல்லூரிக்கான இணையதளமும் ஆரம்பிக்கப்பட்டமை வரவேற்கத்தக்கது. நிகழ்வில் கிறிஸ்தவ குருவானவர்கள், ஆலோசனை நிர்வாக சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள, பழைய மாணவியர், நலன் விரும்பிகள் என்போர் வருகை தந்து நூற்றாண்டு விழா ஆராதனை வைபவத்திற்கு மெருகேற்றினர்.

**இந்திமதி சுப்பையா**
**(ஆசிரியை, மோபிறே கல்லூரி)**

# எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி
# பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ∴பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | ஜுலை 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/05/12/19 | ஜுலை 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 06/14/20/25 | ஜுலை 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், |
| 07/15/21/26 | ஜுலை 2022 | மஹியங்கனை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 07/15/21/26 | ஜுலை 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 07/15/21/26 | ஜுலை 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 07/15/21/26 | ஜுலை 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 08/22/27/28 | ஜுலை 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 08/22/27/28 | ஜுலை 2022 | பிரதான வீதி கிரண். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 08/22/27/28 | ஜுலை 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 08/22/27/28 | ஜுலை 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல 3, 5 வல்லை வூதி சங்கானை. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 08/22/27/28 | ஜுலை 2022 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 08/22/27/28 | ஜுலை 2022 | கண்டி வீதி, கொடிகாமம். |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ∴பினான்ஸ் பி.எல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**

தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## பெறுகை அறிவித்தல்

**குளியாப்பிட்டிய பிரதேச சபை**

**கட்டுபொத்த இருமாடி வர்த்தக கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல்**

குளியாப்பிட்டிய பிரதேச சபையினால் நேரடி நிர்மாண முறைமையின் கீழ் நிர்மாணிக்கப்படும் கட்டுபொத்த வர்த்தக கட்டிடத்தொகுதி கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய வேலைகளை முடிவுறுத்துவதற்குத் தேவையான பயிற்சி/ விசேட பயிற்சி/ பயிற்சியற்ற தொழிலாளர்களின் உழைப்பை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான சகல ஆவணங்கள் மற்றும் தகவல்களை 2022.06.15 பி.ப.3.00 வரை குளியாப்பிட்டி பிரதேச சபையின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ.1000.00 வைப்புத்தொகையை செலுத்தியபின்பு பெற்றுக்கொள்ளலாம். இதுபற்றிய மேலதிக விபரங்களை 037-4947212 மற்றும் 037-4947234 தொலைபேசி இலக்கத்தை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**2022.06.02**
**ஈ.எம்.விஜயசிரி ஏக்கநாயக்க**
**தலைவர்**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## மல்வத்த வலி பிளாண்டேசன்ஸ் பிஎல்சி
# வருடாந்த பொதுக்கூட்டம் 2022

மல்வத்த வலி பிளாண்டேசன்ஸ் இன் இருபத்தெட்டாவது (28 ஆவது) வருடாந்த பொதுக் கூட்டமானது 2022 ஜுன் 27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-12, டாம் வீதி 280 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் சபை அறையில் மெய்நிகராக்கல் வழியாக நடைபெறும்.

பதிலாள் பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புள்ள ஆவணங்கள் இக்கம்பனியின் **www.malwattevalley.com** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலும் **www.cse.lk** என்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## இலங்கை துறைமுக அதிகார சபை
# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/10/009-A | Laser Printers ( Multifunctional) | 60,000.00 | 1,000.00 | 24-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/010 | 07 (Nos) Multimedia Projector with Screen | 16,000.00 | 1,000.00 | 24-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜுன் 03ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

### அற்றோணித்தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது 08ம் திகதி ஆனி மாதம் 2021ம் ஆண்டு திகதியிடப்பட்டு London ஐச் சேர்ந்த சொலிசிற்றர் Miss Umavathy Duraisingam முகதாவில் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித்தத்துவ பத்திரமானது, இல. 08, சுவாட்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நவரட்ணம் இம்மானுவேல் நிக்கொலஸ் (தே.அ.அ.இ. 483393300V) என்பவரின் பெயரில் 40, Constance Grove Dartford DA12GA, United Kingdom இல் வசிக்கும் யோசப் மகள் பேர்லின் சுமதி ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் 28ம் திகதி வைகாசி மாதம் 2022ம் ஆண்டு முதல் மீளப்பெறுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோர்ணித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

**யோசப் மகள் பேர்லின் சுமதி**

### அற்றோணிதத்துவ அதிகாரத்தை இரத்துச் செய்வதற்கான அறிவித்தல்

மாகொல, மாகொல தெற்கு, சாந்தி மாவத்தை, இல. 216/3 என்ற இடத்தில் குடியிருக்கும் **அலவத்த கங்கானமலாகே பத்மா ரத்நாயக்க** (தே.அ.அ.இல. 467730479V) ஆகிய நான் மொனராகலை, ஒக்கம்பிட்டிய, புருதகொல்ல, இல. 269/1 என்ற இடத்தில் குடியிருக்கும் **தொன் மெனுவெல்கே தொன் சஹன் அநுராத** (தே.அ.அ.இல. 853163325V) என்பவருக்கு வழங்கப்பட்ட 2019 நவம்பர் மாதம் 09ஆம் திகதி மாலபே எனம் இடத்தில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி. **லொக்குராலலாகே தோன நயோமி நிரோஷிகா** என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்டதும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பத்தரமுல்லை தலைமை காரியாலயத்தில் எழுத்து பூர்வ அதிகாரமளிப்பு அல்லது அற்றோணி தத்துவ அதிகாரப் புத்தகத்தின் 297ஆம் பிரிவில் 39ஆம் பதிவேட்டின் கீழ் இல. 21452 எனும் தினப்பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவ அதிகாரத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் உடனடியாக ரத்துச் செய்கிறேன் என இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**அலவத்த கங்கானமலாகே பத்மா ரத்நாயக்க**
**இல. 216/3, சாந்தி மாவத்தை,**
**மாகொல தெற்கு,**
**மாகொல.**

**NSB** National Savings Bank

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கேள்வி இல.: NSB/PT/ITE/2022/13**

## தேசிய சேமிப்பு வங்கிக்கு Security Incident even Management (SIEM) முறைமையை வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்,

**Security Incident Even Management (SIEM)** முறைமையை வழங்குவதற்காக இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த முகவராண்மை உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| பெறுகையின் விளக்கம் | Security Incident Even Management System |
|---|---|
| பெறுகையின் முறைமை | தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் |
| பிரயோகப்படுத்தக்கூடிய மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | 15,000 ரூபா |
| சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுப்பிணையின் பெறுமதி | 640,000 ரூபா |
| விலைமனு ஆவணங்களின் வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2022.06.27 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம் | 2022.06.28 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. எந்தவொரு கேள்விதாரருக்கும் முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக செயற்படின், கேள்வியை பெற்றுக் கொள்வதற்கு முன்னராகவும் ஒப்பந்தம் வழங்கிய பின்னரும் அவர் தம்மை பதிவு செய்து கொள்ளல் கட்டாயமானதாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் வழங்கல் முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2022.06.02 ஆம் திகதியிலிருந்து 2022.06.28 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே குறிப்பிட்டுள்ளதிற்கு உரித்தான பெறுமதியிலும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்காட்டி நாட்கள் ஆகக் குறைந்த காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதும் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஏற்றுக் கொள்ளத் தகுதியானதுமான வங்கி உத்தரவாதம்/விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்ட திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவற்றை மூடிய பின்னர் திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் விலைமனுவின் பகுதியொன்றை ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை தேசிய சேமிப்பு வங்கியானது கொண்டுள்ளது.

வழங்கல்களுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - பெருநிறுவன பெறுகைக் குழு – உயர் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# முன்மொழிவுகளை அழைத்தல்

## கடந்த தேசிய கரையோர வலய முகாமைத்துவ திட்டங்களின் அமுலாக்க முன்னேற்றம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் மதிப்பிடலுக்கான உசாத்துணை

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்திற்காக கடந்த தேசிய கரையோர வலய முகாமைத்துவத்தின் அமுலாக்கல் முன்னேற்றம் மற்றும் செயல்திறனின் மதிப்பீட்டு பணிக்காக உசாத்துணை நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்காக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முன்மொழிவுகளை அழைக்கின்றார். இச்சேவை தொடர்பான மேலதிக விபரங்கள் குறிப்பு முன்விதிகளின் முன்மொழிவுகளை அழைத்தலின் 05 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

2. தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட உசாத்துணைகளை தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் இறுதிப் பதிப்பில் விளக்கத்துடன் கூடிய கொள்கைகளுடன் தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையிலான தெரிவின் கீழ் உசாத்துணை நிறுவனம்/ பல்கலைக்கழகமொன்று தெரிவு செய்யப்படும்.
3. 2022 ஜுன் 02 ஆம் திகதியிலிருந்து 2022 ஜுன் 10 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் 5000 ரூபாவிற்கான மீளளிக்கப்படாத தொகையை செலுத்திய பின்னர், முன்மொழிவுகளுக்கான படிவங்களை இத்திணைக்களத்திலிருந்து கையேற்றுக் கொள்ளலாம்.
4. முன்மொழிவுகளுக்கான படிவங்களிலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகள் 2022 ஜுன் 30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்.**

BE BETTER INFORMED!
News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6293MP) | 18 Nos. Fuel Injectors for Cat C 15 Engine Fitted to ZPMC RTGS at JCT | 63,000.00 | 1,000.00 | 30-06-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6295(HM) | 01 No. Hydro Pen System with CO2/DCP Application | 80,000.00 | 1,000.00 | 30-06-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6308(EL) | 05 Nos. Pulse Generators for Fuji Cranes at JCT | 25,000.00 | 1,000.00 | 30-06-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6311(EL) | Spare Parts for the Stinis Spreaders at ECT | 50,000.00 | 1,000.00 | 30-06-2022 மு.ப. 10.00 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 ஜூன் 03ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. 2381652, 2470443**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/PT/04/052 | Paint Items | 22,000.00 | 1,000.00 | 23-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/17/061 | 400 Len. MS Angle 75X75X6MM 5.8M Per Length | 35,000.00 | 1,000.00 | 24-06-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/13/54 | Gear Lube Lanka 320 – 2100 Ltrs | 18,000.00 | 1,000.00 | 24-06-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
